# ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை

சென்னை அரசாங்க செய்தி இலாகா வெளியீடு
1955

விலை அணா 2.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பொதுப்படையான திட்டம் | 2 |
| திட்டத்தின் விவரம் | 3 |
| நீர்ப்பாசனம் | 5 |
| மின்சாரசக்தி | 14 |
| விவசாயம் | 21 |
| கால்நடை அபிவிருத்தி | 30 |
| மீன் இலாகா | 31 |
| காடுகள் | 34 |
| கைத்தொழில்கள் | 36 |
| பால் பண்ணையும் பால் விநியோகமும் | 42 |
| கூட்டுறவு | 43 |
| சுகாதாரம் | 45 |
| வைத்தியம் | 47 |
| கல்வி | 50 |
| அரசாங்க சாலைகள் | 54 |
| ஹரிஜன க்ஷேம நலன் | 57 |
| கிராமாபிவிருத்தி | 60 |

# ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை

உழைப்பினால்தான் உன்னத சமுதாயத்தை உருவாக்க வேண்டும். உழைப்பே ஒரு பெரிய சமுதாயத்துக்கு உயர்வளிக்கும். உழைப்பில் முழுமனதுடன் ஈடுபட ஒரு சமுதாயம் முற்பட்டு, சமுதாயத்தின் க்ஷேம நலனுக்கு சர்க்காரும், வேண்டிய திட்டங்களை வகுத்து உதவுவார்களானால் அத்திட்டங்கள் சமுதாயத்தின் புதுவாழ்வுக்கும் புத்துயிருக்கும் ஜீவன் அளிப்பதாய் விளங்கும். நாட்டின் உற்பத்திப் பெருக்கம், வாணிப வளர்ச்சி, கைத்தொழில் அபிவிருத்தி, கிராமச்சீரமைப்பு முதலிய சகல வித சமுக நலச் சேவைகளும் திட்டத்தின் அம்சங்களாய் நிறைவேற்றப்படும். திட்டங்களை வகுத்து விடலாம். அதற்கு வேண்டிய செலவுகளை மதிப்பிட்டு நிதியையுந் திரட்டி விடலாம். ஆனால் அவற்றால் எதிர்பார்க்கும் பலன் சுலபமாய்க் கிட்டிவிடாது. திட்டத்தில் வகுக்கப்பட்ட அம்சங்களை நிறைவேற்ற மக்கள் ஒன்றுபட்டு முன் வந்தால் மட்டுமே அந்தத் திட்டம் உயிர்பெறும். நல்ல பலனைக் கொடுக்கக்கூடிய சாதனமாய் நிலவும். மக்களின் மாபெரும் ஒத்துழைப்பினால்தான் திட்டங்களை வெற்றிகரமாய் நிறைவேற்ற முடியும். நாளைக்கென்று ஒத்தி வையாமல் அந்த ஒத்துழைப்பை இன்றே மக்கள் உதவ முன் ,வரவேண்டும். நம் நாட்டின் பண்டைப் பெருமையையும், நாட்டின் தந்தை, மகாத்மாவின் பொன் மொழிகள் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் இன்றையப் பெருமையையும் நிலை நாட்டும் வகையில் நாம் ஒரு சமுதாயமாய் விளங்க வேண்டுமானால் இந்த உழைப்புச்சவாலை நாம் மிகத் தைரியமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஐந்தாண்டுத்திட்டத்தின்படி சென்னை ராஜ்யத்தில் என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றனவென்பதைப் பின்னுள்ள பக்கங்களில் காணலாம். அதில் இலக்கியச் சுவையை எதிர்பார்த்தால் புள்ளி விவரங்கள்தான் குவிந்து கிடக்கும். ஆனால் அதில் ஆழ்ந்து சென்று விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினால் பல முக்கிய முன்னேற்றங்களைக் காணமுடியும். வறண்டு கிடந்த நிலங்களைப்

பவானிசாகரம், மலம்புழா போன்ற திட்டங்கள், வளம்பெறச் செய்வதையும், மின்சார அபிவிருத்தியால் சிறிதும் பெரிதுமான கைத்தொழில்கள் பல பெருகிவருவதையும், இவற்றின் மூலம் சமூக வளர்ச்சி ஏற்பட்டு வருவதையும் பார்க்கலாம். திட்டம் செய்வது என்ன வென்பது தெளிவாகும்.

## பொதுப்படையான திட்டம்

தேசிய ஐந்தாண்டுத் திட்டம் 1951-ம் ஆண்டு எப்ரலில் ஆரம்பமாயிற்று. திட்டத்தின் முதலாவது நகல் 1951-ம் ஆண்டு ஜூலைமாதத்தில் பிரசுரமாகியது. 1952-ல் திட்டம் இறுதியாக வகுக்கப்பட்டது. அதன்படி 1951–52 முதல் 1955–56-வரை ஐந்து வருஷ காலத்தில் ரூ. 2,069 கோடி நாட்டின் முன்னேற்றத்துக்காகச் செலவு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதில் ரூ. 1,241 கோடியை மத்திய சர்க்காரும், ரூ. 828 கோடியை ராஜ்ய சர்க்கார்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆந்திராவுடன் கூடிய சென்னை ராஜ்யத்தின் திட்டச் செலவு ரூ. 141 கோடி. இது மொத்தச் செலவில் 17 சத விகிதமாகும். பஞ்சப் பிரதேசங்களில் விசேஷ அபிவிருத்திகள் செய்வதற்கென்றும், வேலையில்லாத்திண்டாட்டத்தைக் குறைப்பதற்கென்றும் திட்டக் கமிஷன் சில மாறுதல்களைச் செய்தது. அதன்படி திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 2,249 கோடியாகவும், அதில் ராஜ்ய சர்க்கார்களின் பங்கு ரூ. 918 கோடியாகவும் அதிகரிக்கப்பட்டன. 1953-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து தனி ஆந்திர ராஜ்யம் அமைக்கப்பட்டது. எனவே தற்போதுள்ள சென்னை ராஜ்யத்திற்கு திருத்தத் திட்டம் ஒன்று வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. திருத்தத் திட்டம் திட்டக் கமிஷனால் சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி தற்போது மத்திய சர்க்காரின் உதவியுடன் நடைபெறும் சமுதாய நலத் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள், அபிவிருத்தி வட்டாரங்கள், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் இவற்றின் செலவு நீங்கலாக ரூ. 84 கோடி திட்டத்தின் ஐந்தாண்டுக் காலத்தில் செலவு செய்யப்படும்.

1954–55-ம் ஆண்டு முடிவிற்குள் திட்டத்தின் முக்கால் பாகம் வரை நிறைவேற்றப்பட்டுவிடும். பாக்கியுள்ள கால் பாகம் வருகிற வருஷத்தில் நிறைவேற்றப்படும். இதற்குள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிறது. அதன்படி ரூ. 200 கோடி சென்னை ராஜ்யத்திற்குச் செலவு செய்யப்படலாம்.

# திட்டத்தின் விவரம்

சென்னை ராஜ்ய திட்டப்படிக்குள்ள முக்கிய இனங்களும், அவற்றிற்காகச் செலவழிக்கப்பட்டுள்ள தொகையும் அடியிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

| அபிவிருத்தித் தலைப்பு. | திட்டப்படி மொத்தச் செலவு. | 1951-52 முதல் 1953-54 வரையுள்ள மூன்று வருஷச் செலவு. | உற்பத்தியில் 3-ம் பத்தியின் சத விகிதம். | 1954-55-க்கு செலவு மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (லட்சக்கணக்கில் ரூபாய்.) | | | |
| 1 விவசாயம் .. .. | 902 | 527 | 58 | 198 |
| 2 கால்நடை அபிவிருத்தி. | 56 | 22 | 39 | 7 |
| 3 பால் பண்ணை .. .. | 13 | 9 | 70 | 2 |
| 4 காடுகள் .. .. | 74 | 15 | 20 | 4 |
| 5 கூட்டுறவு .. .. | 17 | 9 | 54 | 4 |
| 6 மீன் இலாகா .. .. | 49 | 25 | 50 | 6 |
| 7 கிராமாபிவிருத்தி .. | 30 | 30 | 100 | .. |
| 8 நீர்ப்பாசனம் .. .. | 2,019 | 1,117 | 55 | 514 |
| 9 மின்சாரம் .. .. | 2,831 | 1,446 | 51 | 496 |
| 10 குடிசைக் கைத்தொழில்கள். | 44 | 21 | 48 | 15 |
| 11 இதரக் கைத்தொழில்கள். | 128 | 78 | 61 | |
| 12 சாலைகள் .. .. | 358 | 219 | 61 | 54 |
| 13 கல்வி .. .. .. | 494 | 199 | 40 | 82 |
| 14 வைத்தியம் .. .. | 248 | 173 | 69 | 54 |
| 15 சுகாதாரம் .. .. | 518 | 202 | 39 | 59 |
| 16 வீட்டு வசதி .. .. | 190 | 105 | 55 | 42 |
| 17 பின் தங்கிய வகுப்பினர் ஷேம நலன். | 416 | 235 | 57 | 90 |
| மொத்தம் .. | 8,387 | 4,432 | 53 | 1,627 |

நீர்ப்பாசனத்துக்கும், மின்சார அபிவிருத்திக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை (49 கோடி) திட்டத்தில் மொத்தம் ஒதுக்கப்பட்டிருப்பதில் 58 சத விகிதமாகும். அடுத்ததாக விவசாயத்துக்கு 9 கோடி. இது மொத்தத்தில் 10 சத விகிதம். மத்திய சர்க்காரின் உதவியும், வரி விதிப்பும் உள்பட எவ்வளவு பணம் ஒதுக்க முடியுமென்பதை நிர்ணயித்துக் கொண்டு அதற்குத் தகுந்த அளவில் திட்டத்தை வகுக்கலாம். ஆனால் திட்டத்தில் எந்தெந்த அலுவல்களுக்கு முன் சலுகை காட்டவேண்டும் என்று பொறுக்கி எடுக்க வழியில்லை. காரணம் ஏற்கனவே மேற்கொண்டிருந்த நீர்ப்பாசனத் திட்ட வேலைகள், மின்சார அபிவிருத்தி வேலைகள், சிறிய நீர்ப்பாசனம், மற்றும் ஸ்தல திட்ட வேலைகள் இவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருந்தது. திட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் இந்தத் துறைகளில் சென்னை ராஜ்யம் யுத்த புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் வெகுதூரம் முன்னேறியிருந்தது. தவிர நாட்டில் பொதுவாக உணவு தானியப் பஞ்சம் ஏற்பட்டிருந்ததால் உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியிருந்தது. எனவே இதர

வேலைகளுக்கு குறிப்பாய் சமூக நல சேவைகளுக்குச் சிறிதளவு தொகையே ஒதுக்க சாத்திய மேற்பட்டது. திட்ட அலுவல்களுக்குச் செய்யப்பட்டிருக்கும் செலவைக் கவனித்தால், மொத்தத்தில் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில், சென்ற மூன்று ஆண்டுகளில் 53 சத விகிதம் செலவாகியிருக்கிறது. இது ஒரு திருப்திகரமான முன்னேற்றமே. நீர்பாசனத்துக்கும் மின்சாரத் துக்கும் 53 சத விகிதமும், விவசாயத்துக்கு 58 சத விகிதமும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கால்நடை அபிவிருத்தி, காடுகள், குடிசைக் கைத்தொழில்கள், கல்வி, சுகாதாரம் இவற்றிற்குத் திட்டப்படி செலவு செய்ய முடியவில்லை—திட்டத்தின் முதல் இரண்டு வருஷங்களில், ராஜ்யத்தில் பஞ்ச நிலைமை அதிகரித்திருந்ததால் உண்டான கஷ்டங்களால் இவற்றைக் கவனிக்க முடியாது போயிற்று. இப்பொழுது இந்திய சர்க்காரின் உதவியுடன் சமூக நல சேவைகளுக்கு, குறிப்பாய் நகரக் குடிதண்ணீர் சப்ளை, சாக் கடைத் திட்டங்களுக்கு அதிகப்படியான செலவு செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது. தவிர 1955–56-ல் கிராம மின்சாரத் திட்டங்களில், மேலே குறிப்பிடப்பட்ட அளவுக்கு அதிகமாக ரூ. 3 கோடி வரை செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேலைகொடுக்கும் வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொள்வதற்காக மற்றும் பல மின்சாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு இனத்திலும் பூர்த்தியாக வேண்டியதில் எவ்வளவு நிறைவேறியிருக்கிறதென்பதை இனி கவனிப்போம்.






## நீர்ப்பாசனம்

நவ இந்திய நிர்மாணத்தில் முதலாவதான முன் சலுகை காட்டப்படும் திட்டங்களில் நீர்ப்பாசனமும் ஒன்று. முன்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியில்லாத பொழுது, இந்திய ஜீவ நதிகளின் ஏராளமான தண்ணீர் ஒரு வித பயனும் அளிக்காமல் வீணுய்க் கடலில் போய்ச் சேர்ந்துகொண்டிருந்தது. நிலங்களும் வறண்டு கிடந்தன.

கங்காதேவி என அவற்றைப் போற்றும் மக்களுக்கு அவை தம் நீர் வளத்தைச் சொரிந்து உதவும்படி அந் நதிகள் இப்பொழுது தூண்டப்படுகின்றன.

திட்டத் தொகையில் 55 சத விகிதத்தை மூன்று ஆண்டுகளில் செலவு செய்ததில் பவானிசாகரமும், மற்றும் காவேரிக் கழிமுகப் பிரதேசத்தில் 12 வடிகால் திட்டங்களில் 11-ம் அநேகமாய் நிறைவேறி விட்டன. மணிமுத்தாறு, மேட்டூர்க்கால்வாய், மலம்புழா திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. சில நிர்வாக இடஞ்சல்கள் காரணமாக ஆறணியாற், வாளயாற் திட்டங்கள் குறிப்பிட்ட அளவுக்கு முன்னேற வில்லே. வைகை, அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி திட்டங்களுக்கு 1954-55-ல் சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளனர். இத்திட்டங்களுக்கு இந்த வருஷத்துக்கும், அடுத்த வருஷத்துக்குமாக ரூ. 4 கோடிக்கு மேல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு இன்னும் சுமார் ரூ. 6 கோடி தேவையிருக்கும். அத்தொகை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படவேண்டும்.

திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள், மதிப்பிடப்பட்ட செலவு, அவற்ருல் பயனடைய விருக்கும் நிலப் பரப்பு முதலியவை கீழே தரப்பட்டுள்ளன.

## முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரும் அலுவல்கள்..

| திட்டத்தின் பெயர். (1) | ஆரம்பமான தேதி / பூர்த்தி தேதி. (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (லட்சக்கணக்கில் ரூபாய்.) | ஜில்லா / பயனடையும் பிரதேசம். (4) (எக்கர்.) |
|---|---|---|---|
| 1 பவானிசாகரம் .. .. | 1/49 / 3/55 | 996 | கோயம்புத்தூர் / 207,000. |
| 2 மலம்புழா நீர்த்தேக்கம் .. | 3/49 / 9/55 | 442 | மலையாளம் / 40,000. |
| 3 மேட்டூர் கால்வாய்த் திட்டம் .. | 6/49 / 3/56 | 267 | சேலம், கோயம்புத்தூர் / 45,000. |
| 4 காவேரிக்கழிமுனைப் பிரதேச வடிகால் திட்டம். | 45/46 / 3/55 | 30 | ஒன்று தவிர மற்றத் திட்டங்கள் பூர்த்தியாகி விட்டன. |
| 5 மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டம். | 5/51 / 3/57 | 398 | திருநெல்வேலி / 20,000. |
| 6 ஆறணியாற் நீர்த் தேக்கத் திட்டம். | 11/51 / 1956 | 104 | செங்கற்பட்டு / 3,000 புதிது. |
| 7 வாளயாறு நீர் தேக்கத் திட்டம். | 1953 / 1956 | 100 | மலையாளம் / 7,000 |
| 8 மங்கலம் நீர் தேக்கத் திட்டம். | 10/53 / 6/56 | 85 | மலையாளம் / 6,000. |
| 9 அமராவதி நீர் தேக்கத் திட்டம். | 1954 / 1956 | 297 | கோயம்புத்தூர் / 15,000 |
| 10 வைகை நீர்த்தேக்கத் திட்டம் .. | 4/54 / 3/58 | 243 | மதுரை, ராமநாதபுரம். / 20,000. |
| 11 சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம். | 10/54 / 3/59 | 289 | வட ஆற்காடு, தென் ஆற்காடு / 20,000. |
| 12 கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். | 12/54 / 3/59 | 184 | சேலம். / 7,000 |

பல்வேறு திட்டங்கள் சம்பந்தமான விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன :—

**மலம்புழா நீர்த்தேக்கத் திட்டம்.**

மலையாள ஜில்லா, பாலக்காட்டுத் தாலுகா, ஒலவக்கோட்டையிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில், பாரதபுழா நதியின் ஒரு உபநதியான மலம்புழா நதியின் குறுக்கே அணை கட்டி நீரைத் தேக்குவது இத்திட்டமாகும். அணை 6,066 அடி நீளம். அதில் 5,337 அடி கல் சுண்ணும்பினால் கட்டப்படுவது. பாக்கி மண் அணை. அணையின் அதிகபட்ச உயரம் 125 அடி. அணைப் பிரதேசத்தில் தண்ணீர் தேக்கும் விஸ்தீரணம் 51 சதுர மைல்கள். அணை கட்டச் செலவு ரூ. 442 லட்சம்.

காரைக்கட்டு அணையின் நான்கு பகுதிகளில் மூன்று பகுதி வேலை முடிவடைந்து விட்டது. நான்காவதான பிரதான பாகத்தில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. சுமார் 99 சத விகிதம் இந்த வேலை பூர்த்தியாகி உள்ளது.

கால்வாய் வெட்டும் வேலை 15 மைல் நீளம் முடிவடைந்திருக்கிறது. பதினாறுவது மைலிலிருந்து 19/6 மைல் வரையுள்ள வேலை நடந்துகொண்டிருக்கிறது. பதினைந்தாவது மைல் வரை விநியோகக் கால்வாய்களும் அநேகமாய் வெட்டப்பட்டுவிட்டன.

இந்த வருஷத்தில் 18,000 ஏக்கர்களின் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.



பூர்த்தியாகிவரும் மலம்புழாத்திட்டம்.



பவானி சாகரம்.

இந்தக் கால்வாய் 40,000 ஏக்கர்களுக்கு மூன்றுபோக விளைச்சலுக்கு பாசன வசதி உண்டுபண்ணுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்குப் பருவம், வடகிழக்குப் பருவம் மூன்றுவது போகமாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் கோடைப் பயிரும் விளையும். சுமார் 10,000 டன் அரிசி உற்பத்தியாகும்.

**பவானி சாகரம்.**

கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானி நதிக்குக் குறுக்கே அணை போட்டு ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் நதியில் தண்ணீர் பிடிக்கத் தகுந்த பிரதேச விஸ்தீர்ணம் 1,625 சதுர மைல்கள். அணையின் மொத்த நீளம் 28,900 அடி. அதில் நதிக்குள் கட்டப்பட்டிருக்கும் 1,523 அடி கல், சிமிட்டியினாலும், பாக்கி மண்ணாலும் ஆக்கப்பட்டுள்ளது.

அணையின் அதிகபட்ச உயரம் 100 அடி. அது மதகுக்கு இடது புறத்தில் அமைந்திருக்கிறது. நீர்த்தேக்கத்தின் பரப்பு 30 சதுர மைல்கள்.

இந்தத் திட்டம் 33,000 டன் உணவு தானியங்களையும், 14,700 டன் பருத்தியையும் உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அணை அநேகமாய்க் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மதகுக் கதவுகள் செய்யப்படுகின்றன. அவை செய்து முடிந்ததும் மதகின் மேல் பொருத்தப்படும். பிரதானக் கால்வாயும், விநியோகக் கால் வாய்களில் 80 சத விகிதமும் வெட்டப்பட்டாய்விட்டது. 1955-ம்ஆ

மார்ச்சுடன் இத்திட்ட வேலை முற்றிலும் பூர்த்தியாகிவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது. 1954-55-ல் 1,00,000 ஏக்கர் நிலங்களுக்கு இந்தக் கால்வாயில் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்மூலம் பயனடையும் மொத்த விஸ்தீர்ணம் 2,07,000 ஏக்கர்.

**மணிமுத்தாறுத் திட்டம்.**

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பரபரணி நதியின் உபநதிகளி லொன்றாகிய மணிமுத்தாறு நதியின் குறுக்கே அணைபோட்டு இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்படுகிறது. இந்த இடத்தில் தண்ணீர் பிடிக் கும் பரப்பு 62·4 சதுர மைல்கள். அணையின் மொத்த நீளம் 9,270 அடி. நீர்த்தேக்கத்தின் பரப்பு சுமார் 9 கோடி சதுர அடி. நீர்த்தேக்கத்தின் வலது பக்கத்தில் 28 மைல் நீளத்தில் ஒரு கால்வாய் வெட்டப்படும். அது அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, நாங்குனேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகாக்களிலுள்ள வானம்பார்த்த குளங்களுக்கு தண்ணீர் விநியோகிக்கும். அவற்றின் ஆயக்கட்டி லுள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படும். தாம்பரபரணி தீரத்தில் ஏற்கனவே பாசன வசதி பெற்றுவரும் 83,000 ஏக்கருக்கும் இதனால் பிரயோஜனமுண்டு. இந்தத் திட்டத் தின் மூலம் 20,000 டன் அதிக அரிசி உற்பத்தியாகுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. திட்டத்தின் செலவு ரூ. 398 லட்சம். 1957 ஏப்ரலில் இத்திட்டம் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.



மணி முத்தாறு திட்டம்—வேலை நடக்கிறது

**மேட்டூர் கால்வாய் திட்டம் (கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்கள்).**

மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்டப்படுகிறது. தேக்கத்திலுள்ள நீர் மட்டம் உயர்ந்த அளவிலோ அல்லது குறை வாயோ இருக்கும் இரு காலத்திலும் கால்வாயில் தண்ணீர் ஓடும் படியான வகையில் மடைகள் அமைத்து பாசனத்துக்குத் தண்ணீர் விட இதன்மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது. பிரதானக் கால்வாய் மலை அடிவார ஓரமாக 4 மைல் 2 பர்லாங் நீளம் அமைக்கப்படும். அதன் பிறகு கால்வாய் இரண்டாய்ப் பிரிந்து, ஒன்று காவிரி நதியின் வலதுபக்கமாய் $25\frac{1}{2}$ மைல் நீளம் ஓடிப் பவானி நதியில் சேர்ந்து விடும். இது, இந்தக் கால்வாய்க்கும் காவிரி நதிக்கும் இடையேயுள்ள 18,000 எக்கர் நன்செய் புன்செய் பயிர்களுக்கு பாசன வசதியை உண்டுபண்ணும். இடது பக்கமாய்ப் போகும் கால்வாய், ஒரு பிரத்தி யேகத் தண்ணீர் வேகக் குழாய் மூலம் காவிரி நதியைக் கடந்து சென்று சேலம் ஜில்லாவிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதியைக் கொடுக்கும்.

இந்த இடது பக்கத்துக் கால்வாய் 39 மைல் நீளமுள்ளது. திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்களில் 27,000 எக்கர் நன்செய் புன்செய் பயிர்களுக்கு உதவுகிறது. இரண்டு கால்வாய்களுமாகச் சேர்ந்து 25,500 எக்கர் புன்செய் பயிர்களுக்கும் 22,500 எக்கர் நன்செய் பயிர்களுக்கு ஒன்றுவிட்டு ஒரு வருஷத்தில் இரண்டு வட்டா ரங்களில் மாறி மாறித் தண்ணீர் விநியோகம் செய்யும். இத் திட்டத்தின் செலவு ரூ. 245 லட்சம்.

திட்ட வேலை திருப்திகரமாய் நடந்து வருகிறது. இந்த வருஷத் தில் மேற்குக்கரைக் கால்வாயில் 19/2 மைல் வரை 7,200 எக்க ருக்குத் தண்ணீர் விடப்பட்டது.

**காவிரி நதி கழிமுகப் பிரதேச வடிகால் திட்டம் (தஞ்சாவூர் ஜில்லா).**

காவிரிநதிக் கழிமுகப் பிரதேசத்தில் பயிர்கள் தண்ணீரில் மூழ்கிப் போகாமல் வடிகால்கள் அமைக்க 12 முக்கிய திட்டங்கள் வகுக்கப் பட்டன. இதன் மூலம் வருஷத்தில் ரூ. 3·8 லட்சம் மதிப்பிடத்தக்க அதிக உணவு தானிய உற்பத்தி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் செலவு ரூ. 30 லட்சம்.

**ஆறணியாறு நீர்த்தேக்கத் திட்டம் (செங்கற்பட்டு ஜில்லா).**

செங்கற்பட்டு ஜில்லா, திருவள்ளூர் தாலூகா, நாகலாபுரம் கிராமத் திலிருந்து 4 மைல் மேற்கே ஆறணியாற்றின் குறுக்கே அணை போட்டு நீர்த்தேக்கம் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கம். நீர் பிடிப்புப் பரப்பு 173 சதுர மைல்கள். இடது கரையில், பூண்டி நீர்த் தேக்கத்திலுள்ளதுபோன்ற ஓர் அதிகத் தண்ணீர் வடி மடை அமைக்கப்படும். அணையின் நீளம் 2 மைல் 2 பர்லாங்கு உயர்ந்த பட்ச உயரம் 47 அடி. அணை பெரும்பாலும் மண்ணினால் கட்டப் படும்.

நீர்த் தேக்கத்தின் இடது பக்கம் ஒன்றும் வலது பக்கம் ஒன்றுமாக இரண்டு கால்வாய்கள் வெட்டப்படும். இடது பக்கத்துக் கால்வாய் 3 மைல் 2 பர்லாங் நீளமுள்ளது. 3,500 எக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்கும். வலதுப்புற வாய்க்கால் 3 மைல் 6 பர்லாங் நீளமுள்ளது. 2,000 ஏக்கருக்குப் பயன்படும். பதினேரு மைல் கீழேயுள்ள ஒரு அணைக்கட்டுக்கும் இந்தத் தேக்கம் தண்ணீர் விநியோகஞ் செய்யும்.

தற்போதுள்ள 2,970 ஏக்கருக்கு பாசன வசதியை ஸ்திரப்படுத்துவதும் மேலும் புதிதாக 2,530 ஏக்கருக்கு பாசன வசதியை உண்டு பண்ணுவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். தவிர அணைக்கட்டாலும் அதைச் சேர்ந்த கால்வாய், குளங்களாலும் தற்போது பயனடைந்து வரும் 5,700 ஏக்கருக்கு அதிகப்படியான தண்ணீர் வசதியையும் இந்தத் திட்டம் கொடுக்கிறது. சாதகமான வருஷங்களில் இரண்டாம் போகப் பயிருக்கும் இது வசதியளிக்கும். இதனல் நீர்த்தேக்கப் பிரதேசத்தில் 3,000 ஏக்கரும், அணைக்கட்டுப் பிரதேசத்தில் 1,900 ஏக்கரும் பயன் பெறும். 5,000 டன் உணவு தானிய உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் செலவு ரூ. 104·19 லட்சம். 1956-ல் வேலை பூர்த்தியாகுமென்று கருதப்படுகிறது.

**வாளயாற் நீர்த்தேக்கத் திட்டம் (மலையாள ஜில்லா).**

மலையாள ஜில்லா பாலக்காடு தாலூகாவில் 6,500 ஏக்கருக்கு பாசன வசதியளிக்க இத்திட்டம் உதவுகிறது. வாளயாறு நதியிலுள்ள இத்தேக்கம் 67 கோடி கன அடி தண்ணீர் கொள்ளக் கூடியது. இங்குள்ள அணை, மத்தியில் காரைக்கட்டு பகுதியும் இரண்டு பக்கங்களிலும் மண் பகுதிகளாலும் ஆக்கப்படுவது. அணையின் நீளம் 3,700 அடி. ஏற்கனவே உள்ள நெல்லிசேரி அணைக்கட்டைச் சேர்ந்த கால்வாய் மூலம் இத்தேக்கத்தின் தண்ணீர் 6,000 ஏக்கருக்கு உபயோகப்படும். இத்திட்டத்தின் செலவு ஒரு கோடி ரூபாய்.

**மங்கலம் நீர்த்தேக்கத் திட்டம் (மலையாள ஜில்லா).**

நீர்த்தேக்கத்தின் அளவு 60 கோடி கன அடி. அணையின் நீளம் 533 அடி. அதில் 433 அடி காரைக்கட்டு. இதைத் தவிர அணை இடதுபக்கத்தில் 2,243 அடியும், வலதுபக்கத்தில் 422 அடியும் மண்ணினல் நீட்டப்படும். இத் தேக்கத்தின் தண்ணீர் 4,935 ஏக்கருக்குப் பயன்படுத்தப்படும். இத்தேக்கத்தின் அளவை அதிகப்படுத்தி திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய நிலங்களுக்கும் தண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. திட்டத்தின் செலவு சுமார் ரூ. 85 லட்சம் ஆகும். வேலை நடந்து வருகிறது.

**அமராவதி நீர்த்தேக்கத் திட்டம்.**

காவிரி நதியின் ஒரு உபநதியான அமராவதி மேற்குத் தொடர்ச்சி மலையில், திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள முன்னருக்கு அருகில் உற்பத்தியாகிறது. நதி, மலைப்பிரதேசத்திலிருந்து சமநிலப் பிரதேசத்துக்குப் பாயுமிடத்தில், கும்பு பாரஸ்ட் பங்களாவிலிருந்து

சுமார் அரைமைல் கீழே அணைகட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டைக்குத் தென்கிழக்கே 14 மைல் தூரத்தில் இந்த தேக்கப் பிரதேசம் இருக்கிறது. இங்கு தண்ணீர் பிடிக்கும் பரப்பு 324 சதுர மைல்கள்.

சாதாரணமாக இந்தத் திட்டத்தினால் 15,000 ஏக்கர் நிலம் பயனடையும். தற்போது பாசன வசதி பெற்றுவரும் 32,000 ஏக்கரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டுக் காலத்தில் இந்த நீர்த்தேக்கத்தின் தண்ணீரால் வசதி பெறும். இத்திட்டச் செலவு ரூ. 272·31 லட்சம். 1956 முடிவில் இந்த வேலை பூர்த்தியாகும்.

**வைகை நீர்த்தேக்கத் திட்டம் (மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்கள்).**

பெரியாறு அணைக்கட்டுப் பிரதேசத்தின் உபரித் தண்ணீர் பெரும் பாகத்தை வைகை நதிக்குத் திருப்பி, வைகை நதி தீரத்தில் புது பாசன வசதியை உண்டுபண்ணுவது இத்திட்டத்தின் நோக்கம். இதன் மூலம் கிடைக்கக்கூடிய உபரித் தண்ணீர் சராசரி 40 கோடி கன அடி. தண்ணீரின் போக்கைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்வதின் மூலம் இதை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிர பெரியாறு ஏரித் தண்ணீரை உபயோகித்து மதுரை ஜில்லாவில் ஒரு மின்சார உற்பத்திச் சாலையை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பெரியகுளம் தாலூகாவில் அணைப்பிரதேசத்தில் நதியின் தண்ணீர் பிடிக்கும் விஸ்தீர்ணம் 870 சதுர மைல்கள். இந்தத் திட்டத்தால் 20,000 ஏக்கர் பயன்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 3 கோடி. முக்கியமான பகுதி வேலைகளை சர்க்கார் அங்கீகரித்திருக்கின்றனர்.

**சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் (வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்கள்).**

வட ஆற்காடு ஜில்லா, சாத்தனூர் கிராமத்துக்குப் பக்கத்தில் பொன்னியாறு நதியின் குறுக்கே அணைபோட்டு நீர்த்தேக்கத்தை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கம். தேக்கம் 460 கோடி கன அடி தண்ணீர் கொள்ளக்கூடியது. எண்ணூறு கோடி கன அடி தண்ணீர் கொள்ளும் அளவுக்கு அதைப் பெரிதாக்கலாம். இதன் தண்ணீர் பிடிக்கும் விஸ்தீர்ணம் 4,180 சதுர மைல்கள். வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களிலுள்ள 20,000 ஏக்கருக்கு இந்தத் திட்டம் பாசன வசதியளிக்கும். சாதாரண வருஷங்களில் மட்டும் இத்திட்டம் வெற்றிகரமாயிருக்குமென்றும், மழையில்லாத வருஷங்களில் தண்ணீர் விநியோகிக்க முடியாதென்றும் கருதப்படுகிறது.

**கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் (சேலம் ஜில்லா).**

சேலம் ஜில்லா, கிருஷ்ணகிரி தாலூகாவில் பொன்னியாற்றின் குறுக்கே அணைகட்டி நீர்த்தேக்கம் அமைப்பது இத்திட்டத்தின் நோக்கம். தேக்கத்தின் அளவு 240 கோடி கன அடி. தேக்கத்தின் தண்ணீர் இரண்டு கால்வாய்கள் மூலம் 7,500 ஏக்கருக்கு (ஏற்கனவேயுள்ள 2,240 ஏக்கரும் சேர்ந்து) உபயோகப்படும். திட்டத்தின் செலவு ரூ. 184 லட்சம்.

# IRRIGATION

## PROGRESS OF PROJECTS INCLUDED IN THE FIVE YEAR PLAN
## (ESTIMATED COST-LESS THAN RS. 5.0 CRORES)

● ———— PROGRAMME.
▬ ▬ ▬ ▬ PROGRESS

| SERIAL No | NAME OF PROJECT | TOTAL ESTIMATED COST IN LAKHS OF RS. | DATE OF START | ANTICIPATED DATE OF COMPLETION |
|---|---|---|---|---|
| 1 | METTUR CANAL | 267 | 1949 JUNE | 1956 MARCH |
| 2 | CAUVERY DELTA DRAINAGE IMPROVEMENTS | 30 | 1946 JUNE | 1955 MARCH |
| 3 | MANIMUTHAR | 398 | 1951 MAY | 1957 MARCH |
| 4 | ARANIYAR | 104 | 1-11-51 | 1956 |
| 5 | WALAYAR | 100 | 1953 | 1956 |
| 6 | MANGALAM | 85 | 20-10-53 | 1956 JUNE |
| 7 | MALAMPUZHA | 442 | 1949 MARCH | 1955 SEP |
| 8 | SATHANUR | 289 | 1954 OCT | 1959 MAR |
| 9 | AMARAVATHI | 297 | 1954 | 1956 |
| 10 | VAIGAI | 300 | 1954 APRIL | 1958 MARCH |
| 11 | KRISHNAGIRI | 184 | 1954 DEC | 1959 MAR |

CUMULATIVE SCHEDULE AND PROGRESS (IN PERCENTAGES)
QUARTER ENDING

1950 1951 1952 1953 1954 1955 1956
MAR JUN SEP DEC MAR JUN SEP DEC MAR JUN SEP DEC MAR JUN SEP DEC MAR JUN SEP DEC MAR JUN SEP DEC MAR JUN SEP DEC

2 3 4 5 8 9 11 15 19 21 24 26 30 32 34 35 42 45 49 55 64 70 78 88 100

2 2.7 3.8 4.7 7.5 9 11.4 14.9 19 21.4 23.8 25.8 30 31.7 34.1 35.1 41.7 44.2

*No programme for a period of five years was chalked out*

66.9 74.6 81.9 84.9 87.0 87.8 88.7 89.0 91.3 91.5 91.6 91.7 92.2 92.2 92.2 92.3 92.3 92.3 92.3

▼.43 2.6 4.3 8.6 12.0 16.3 18.1 22.4 25.9 30.2 33.0 37.2 42.8 47.0 52.1 58.1 64.9 69.2 74.3 80.0 86.3 91.8 95.6

▼1.2 2.0 2.6 5.2 6.9 8.6 11.2 15.5 17.2 22.6 25.1 36.4 39.2

0.5 1.0 2.0 3.5 5.0 7.8 10.8 14.8 17.8 20.3 30.3 41.3 51.3 62.6 71.6 80.6 90.6 100

0.51 1.04 1.8 2.63 5.2 7.56 9.1 11.93 13.26 15.57 17.16

▼.5 2 10 15 25 40 50 60 70 80 90 95 100

▼1 3 10 15 30 40 50

▼ 4 8 11 19 31 46 56 72 92 100

▼ 8 13

4.4 7.6 9.1 12.6 20.7 27.9 31.4 39.5 44.7 50.0 52.8 58.4 65.0 68.4 71.7 74.7 82.6 84.9 87.6 91.0 98.1 100

5.1 8.1 11.3 15.1 22.0 27.3 32.5 38.8 44.7 50.5 53.6 56.7 66.7 70.2 74.5 77.3 84.5 86.7

1 5 11.4 16.4 22 28 34.2 46.2 58.2 70.3

▼1 3 10 20 30 45 55 70 80 90 95 100

▼1 3.5

1.1 2.2 7.6 23.4 27.9 34.7 42.4 50.5 55.9 62.6 70.7

.59

3 11 17 23 29 35 46 57 68.5

NOTE
1 PROGRAMME IS SHOWN FROM THE ANTICIPATED DATE OF COMMENCEMENT TO THE END OF 1956
2 PROGRESS IS SHOWN FROM THE ACTUAL DATE OF COMMENCEMENT
3 STARTING DATE IS INDICATED THUS ▼






## மின்சார சக்தி

மோயாறு ஜலமின்சாரத் திட்டம், பாபநாசம் இரண்டாவது கட்ட விஸ்தரிப்பு, சென்னை முதலாவது கட்ட விஸ்தரிப்பு இவை பூர்த்தியாகிவிட்டன. இவற்றின் மூலம் 58,000 கிலோவாட் மின்சாரம் அதிகப்படியாகக் கிடைத்துள்ளது. பைக்காரா மூன்றாவது கட்ட விஸ்தரிப்பும், சென்னை இரண்டாவது கட்ட விஸ்தரிப்பும் இவ்வருஷம் ஆரம்பிக்கப்படலாமென்றும் இவற்றின் மூலம் 42,200 கிலோவாட் அதிக மின்சாரம் கிடைக்கலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோ-அமெரிக்கத் தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டப்படி சென்னை மூன்றாவது கட்ட விஸ்தரிப்புக்கான இயந்திர சாதனங்களை வாங்க அடுத்த வருஷ ஆரம்பத்தில் ஏற்பாடு செய்யப்படலாம். ரூ. 10½ கோடி செலவில் பெரியாறு ஜல மின்சாரத் திட்டம் இப்பொழுது வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள திட்டப்படி இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் இத்திட்டத்திற்கு ரூ. 135 லட்சம் செலவு செய்யப்படும். குந்தா ஜல மின்சாரத் திட்டம், திட்டக் கமிஷனின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்காக ராஜ்ய திட்டத்தில் ரூ. 50 லட்சம் தற்காலீயமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மின்சார சக்தியைக்கொண்டு செல்லும் கம்பிகளும், மின்சார விநியோகமும் அடுத்த முக்கிய இனங்களாய்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டு திட்டத்தின் முதலாவது மூன்று ஆண்டுகளில் இந்த இனத்துக்கு ரூ. 670 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குத் திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பு ரூ. 1,263 லட்சம்.

கிராம மின்சார விநியோகத்தில் சென்னை ராஜ்யம் தொடர்ந்து முன்னேறிவருகிறது. இந்தியாவிலுள்ள கிராமங்களில் பாதிவரை மின்சார வசதி பெற்றுவிட்டன என்றால் அதற்குச் சென்னையின் தீவிர முன்னேற்றம் ஒரு சிறந்த காரணமாகும். 1953-54 முடிவில் 2,187 கிராமங்களுக்கும், 24,735 விவசாய பம்பு செட்டுகளுக்கும்

மின்சார வசதி விஸ்தரிக்கப்பட்டது. தற்போது ஒரு வருஷத்தில் 250 கிராமங்களுக்கும் 3,000 விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் மின் சாரம் விஸ்தரிக்கவேண்டுமென்பது லட்சியக் குறியாக இருந்துவரு கிறது.

மின்சார அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில், பெரியாறு, குந்தா திட்டங்கள் நீங்கலாக, ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 2,650 லட்சம். அதில் முதல் மூன்று வருஷத்தில் ரூ. 1,446 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது.



பைக்காரா 3-வது கட்ட விஸ்தரிப்பு—அணை கட்டுதல்.

சென்னை ராஜ்யத்தில் 1951 எப்ரல் முதல் ஏற்பட்டுள்ள மின்சார அபிவிருத்தியின் விவரங்கள் வருமாறு :—

முதலீடு ரூ. 18·44 கோடியிலிருந்து ரூ. 29·09 கோடியாக அதிக ரித்தது. வருஷ வருமானம் ரூ. 337 லட்சத்திலிருந்து ரூ. 481 லட்ச மாக அதிகரித்தது. இனிமேல் மின்சார உற்பத்தியில் ஈடுபடவேண் டிய வேலைகளுக்காகச் செய்யப்பட்டுள்ள செலவு ரூ. 8·19 கோடி.

உற்பத்தி அளவு 60 சத விகிதம் அதிகரித்துள்ளது. அதாவது 156,000 கிலோவாட்டிலிருந்து 247,300 கிலோவாட். உற்பத்தி அளவில் முக்கியமான அதிகரிப்பு கீழே தரப்பட்டுள்ளன.—

| | |
|---|---|
| 1 மோயாறு ஜல மின்சாரத் திட்டத்துக்கு ஒரு புது உற்பத்தி நிலையம் .. .. | 36,000 கி.வா. |

| | |
|---|---|
| 2 எற்கனவே உள்ள நிலையங்களுக்கு இணைப்புகள்— | |
| (அ) பாபநாசம் இரண்டாவது கட்டம் .. .. .. .. | 7,000 கி.வா. |
| (ஆ) மதுரை தர்மல் நிலையம் .. | 10,000 கி.வா. |
| (இ) சென்னை தர்மல் நிலையம் முதலாவது கட்டம் .. .. .. | 15,000 கி.வா. |
| (ஈ) பைக்காரா மூன்றுவது கட்ட விஸ்தரிப்பு .. .. .. | 27,200 கி.வா. |
| மொத்தம் .. | 95,200 கி.வா. |

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று வருஷங்களுக்கு எதிர் பார்த்த அளவு அபிவிருத்தி கிடைத்துவிட்டது. திட்டத்தின் மொத்த அபிவிருத்தியும் சீக்கிரம் கிட்டிவிடும் என்பது நிச்சயம்.

திட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கு முந்திய ஆண்டான 1950-51-லும், 1953-54-லும் உள்ள நிலைமை வருமாறு —

| | 1950-51. | 1953-54. |
|---|---|---|
| தேவைப்பட்ட மொத்த மின்சார சக்தி (கி.வா.) .. .. .. | 130,850 | 169,000 |
| அரசாங்க மின்சார உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியான யூனிட்டுக்கள் (10 லட்ச கணக்கில்) .. | 630·97 | 758·07 |
| ராஜ்யம் பூராவுக்குமாக உற்பத்தி செய்யப்பட்ட யூனிட்டுகள் .. | 634·63 | 762·06 |

1950-51-லும், 1953-54-லும் இருந்த சென்னை மின்சார சேவை உப நிலையங்கள் விநியோகக் கம்பி நீளம் இவை கீழே தரப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து சென்னை ராஜ்யத்தில் மின்சார விநியோகம் எவ்வளவுதூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

| | 1950-51. | 1953-54. |
|---|---|---|
| 1 ஈ.எச்.டி. உப நிலையங்கள் .. | 31 | 41 |
| 2 அமைக்கப்பட்ட உற்பத்தி அளவு (கே.வி.ஏ.) .. .. .. | 183,600 | 252,000 |
| 3 எச்.டி. உப நிலையங்கள் .. | 29 | 30 |
| 4 உற்பத்தி அளவு (கே.வி.ஏ.) .. | 43,075 | 61,850 |
| 5 விநியோக டிரான்ஸ்பார்மர்கள். | 1,591 | 2,197 |
| 6 விநியோக அளவு (கே.வி.ஏ.) .. | 100,328 | 145,836 |
| 7 ஈ.எச்.டி., எச்.டி. கம்பிகள் நீளம் (மைல்) .. .. | 4,355 | 5,420 |
| 8 எல்.டி. கம்பிகள் நீளம் .. | 3,580 | 5,140 |
| 9 மின்சார விநியோகம் பெற்றவர்கள் மொத்தம் எண் .. | 250,301 | 341,854 |

## கிராமாந்திர மின்சார விநியோகம்

ஆந்திர ராஜ்யம் தனியே பிரிந்தபோதிலும்கூட, கிராமாந்திர மின்சார விநியோகத்தில் இந்தியாவிலுள்ள இதர ராஜ்யங்கள் எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாகச் சென்னை விளங்குகிறது. சென்ற நான்கு வருஷங்களின் முடிவில் மின்சார உதவி பெற்ற கிராமங்கள் எத்தனை என்பதை அடியிற் கண்ட விவரம் தெளிவாக்குகிறது.

| | |
|---|---|
| 1950-51 .. .. .. .. .. | 1,613 |
| 1951-52 .. .. .. .. .. | 1,820 |
| 1952-53 .. .. .. .. .. | 1,981 |
| 1953-54 .. .. .. .. .. | 2,187 |

சர்க்கார் விநியோகம்பெறும் பிரதேசத்திலுள்ள கிராமங்கள் 1951-54-ல் 348. விநியோக லைசென்ஸ் பெற்றவர்களின் பிரதேசத்திலுள்ள கிராமங்கள் 226. மொத்தம் 574.



பாபநசம் ஜலமின்சாரத் திட்டம்பிரஷர் பைப் லைன்.

1952-53-லும், 1953-54 முதல் 6 மாதங்களிலுமிருந்த நிதி நெருக்கடியில், கிராம மின்சார விநியோக அபிவிருத்தியைக் கவனித்தால் அது அதிருப்திகரமாய்த் தோன்றுது. ஆனால் அவ்வித நெருக்கடி மட்டும் இல்லாவிட்டால் இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.

கிராமங்களில் மிக முக்கியமாய் மின்சார சக்தி உபயோகத்தைத் மக்கள் விரும்புவது, மின்சாரப் பம்பு செட்டுகள் மூலம் விவசாயத் துக்குத் தண்ணீர் இறைப்பதற்கே. அப்படிப்பட்ட உபயோகத்துக்கு அரசாங்க மின்சாரம் பெறுகிறவர்கள், லைசென்ஸ்தாரிடமிருந்து மின் சாரம் பெறுகிறவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | 1950-51. | 1953-54. |
|---|---|---|
| 1 சர்க்காரிடமிருந்து நேரடியாக மின்சாரம் பெறும் விவசாய பம்பு செட்டுகள் .. .. | 11,859 | 17,171 |
| 2 லைசென்ஸ்தார் களிடமிருந்து பெறும் பம்பு செட்டுகள் .. | 2,767 | 4,562 |
| 3 ராஜ்யத்திலுள்ள மொத்த விவ சாய பம்பு செட்டுகள் .. | 14,626 | 24,735 |

மூன்று வருஷங்களில் 7,000 பம்பு செட்டுகளுக்குமேல் அதிகரித் திருக்கின்றன. ஆந்திராவுடன் சேர்ந்த சென்னை ராஜ்யத்திற்கு வருஷ லட்சியக்குறி 3,000 பம்பு செட்டுகள். எனவே ஆந்திரா நீங்கிய தற் போதுள்ள சென்னை ராஜ்யத்திற்கு வருஷத்தில் 2,400 பம்பு செட்டு கள் அதிகரித்திருப்பது திருப்திகரமானதுதான்.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக கிராமங்களில் மின்சாரத்தை கிராம கைத்தொழில்களுக்கு உபயோகிக்கிறார்கள். அதன் விவரம் அடியில் காண்க—

| | 1950-51. | 1953-54. |
|---|---|---|
| 1 மின்சாரம் பெறும் கிராமக் கைத்தொ ழில்கள் .. .. .. .. | 1,556 | 2,241 |
| 2 உபயோகிக்கப்படும் மின்சார சக்தி (கி.வா.) .. .. .. .. | 19,180 | 24,539 |

தேயிலை பக்குவப்படுத்தல், நெல் குத்தல், பருத்தி கொட்டை நீக்கல், கரும்பாலை, வேர்கடலை உடைத்தல், மாவு அரைத்தல், எண்ணெ செக்கு, மற்றும் பவுண்டன் பேனு செய்தல், பட்டு நூல் பாவாற்றல், நாடா நெசவு, கம்பளி நெசவு, முதலியன கிராமக் கைத்தொழில்கள்.

**கைத்தொழில் விஸ்தரிப்பு**

கைத்தொழில் வளர்ச்சிக்குத்தான் அதிகப்படியான மின்சார சக்தி உபயோகப்பட்டிருக்கிறது. மொத்த உபயோகத்தில் எந்த உபயோகத் துக்கு எத்தனை சத விகிதம் செலவாகியிருக்கிறதென்பதைக் கவனித் தால் இது விளங்கும்—

| | | |
|---|---|---|
| கைத் தொழில் .. .. | 58 | சத விகிதம். |
| நீர்ப்பாசனம் .. .. .. | 15 | ,, |
| வீட்டு உபயோகம் .. .. | 14 | ,, |
| வாணிபம் .. .. .. | 6 | ,, |
| பொது விளக்குகள் .. .. | 2·5 | ,, |
| டிராக்டர்களுக்கு .. .. | 2 | ,, |
| இதர இனங்கள் .. .. | 2·5 | ,, |

த்ற்காலக் கைத்தொழில் அபிவிருத்திக்கு மின்சாரம் இன்றியமையாதது என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. சர்க்காரிடமிருந்து நேரடியாக மின்சாரம் பெறும் பிரதேசத்தில் கைத் தொழிலுக்கு 1950-51-ல் 106,000 கிலோவாட்டும், 1953-54-ல் 133,000 கிலோவாட்டும் மின்சார சக்தி விநியோகிக்கப்பட்டிருப்பதிலிருந்து ராஜ்யத்தின் கைத்தொழில் அபிவிருத்தி காணக் கிடக்கிறது.

திட்டத்தின் மூன்று வருஷ காலத்தில், மதுக்கரை, தால்மியாபுரம் சிமிண்டு தொழிற்சாலை விஸ்தரிப்புகளும், 20 பஞ்சாலைகளும் பெரிய கைத்தொழில்களாய் உருவாகியுள்ளன. மத்தியதர, சிறிய கைத்தொழில்களும் 3,859 லிருந்து 5,915 ஆக அதிகரித்துள்ளன. அவற்றிற்காக விநியோகிக்கப்படும் மின்சாரமும் 39,982 கி.வா-விலிருந்து 46,489 கி. வா-ஆக அதிகரித்திருக்கிறது.

## ஐந்தாண்டு திட்டத்தில் திட்டவேலைகள் முன்னேற்றம்

திட்டத்தில் சேர்ந்துள்ள மின்சார அபிவிருத்தி வேலைகள் விவரம்.

| பெயர். | 1951 முதல் 1956 வரை 5 ஆண்டுகளுக்கு உத்தேசச் செலவு. | 1951 எப்ரல் முதல் தேதியிலிருந்து 1954 ஆகஸ்ட் 31-ந் தேதி முடிய 3 வருஷத்தில் ஏற்பட்ட செலவு. | திட்டகாலத்தின் லட்சியக் குறி—மின்சார உற்பத்தி அளவு. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (லட்சக் கணக்கில் ரூபாய்) | | கி.வா. | |
| 1 மோயாறு ஜல மின் சாரத் திட்டம். | 134 | 94 | 36,000<br>1952-53 | பூர்த்தியாகிவிட்டது. |
| 2 பைக்காரா 3-வது கட்ட விஸ்தரிப்பு. | 313 | 245 | 27,200<br>1954 | பூர்த்தியாகுந்தருவாயிலிருக்கிறது. |
| 3 பாபநாசம் 2-வது கட்ட விஸ்தரிப்பு. | 161 | 113 | 17,000<br>1952-53 | பூர்த்தியாகிவிட்டது. |
| 4 சென்னை இயந்திர விஸ்தரிப்பு. | 598 | 248 | 15,000<br>1953 | முதற்கட்டம் பூர்த்தி. |
| | | | 15,000<br>1954 | 2-வது கட்டம் துரிதமாய் முன்னேறி வருகிறது. |
| | | | 30,000<br>1958-59 | 3-வது கட்டம் ஆரம்பிக்கவிருக்கிறது. |
| 5 சென்னை-மேட்டூர் இணைப்பு. | 125 | 79 | | அநேகமாய் பூர்த்தியாகிவிட்டது. |

| பெயர். | 1951 முதல் 1956 வரை 5 ஆண்டுகளுக்கு உத்தேசச் செலவு. | 1951 எப்ரல் முதல் தேதியிலிருந்து 1954 ஆகஸ்ட்டு 31-ந் தேதி முடிய 3 வருஷத்தில் ஏற்பட்ட செலவு. | திட்ட காலத்தின் லட்சியக் குறி—மின்சார உற்பத்தி அளவு. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (லட்சக்கணக்கில் ரூபாய்) | | கி.வா. | |
| 6 மின்சாரம் எடுத்துச் செல்லும் கம்பிகளும் விநியோகமும். | 1,263 | 598 | | வேலை நடக்கிறது. |
| 7 மின்சார ஸ்தாபனங்களை சர்க்கார் விலைக்கு வாங்குதல். | 52 | 12 | | நடைபெறுகிறது. |
| மொத்தம் .. | 2,646 | 1,389 | | |
| புது திட்டங்கள். | | | | |
| 8 பெரியாறு ஜல மின்சார திட்டம். | 135 | | 140,000 / 1958-59 | வேலை ஆரம்பமாகியிருக்கிறது. |

பழைய திட்டங்கள் எல்லாம் அநேகமாய்ப் பூர்த்தியாகிவிட்டன. பாக்கியிருக்கும் சிலவும் திட்டப்படி சீக்கிரம் பூர்த்தியாகிவிடும்.



சென்னை இயந்திர விஸ்தரிப்புகள்—புது "பி" நிலையம்.






## விவசாயம்

நம் பாரத நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் தேசம் உணவு பற்றுக் குறையால் வாடிக்கொண்டிருந்தது. அந்நிலையுடன் நம் சமூதாயம் போராடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மக்களின் ஒன்றுபட்ட அப் போராட்டம் வெற்றி கண்டிருக்கிறது. இனி நமக்கு உணவுப் பஞ்சம் இல்லை என உறுதி கூறலாம். உணவு வகைக்காக வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த ஏராளமான நம் நிதி இனி வெளியேறுமல் நமக்கே உபயோகப்படும். உணவில் சுயதேவை பூர்த்தி ஏற்பட்டுவிட்டதால் இனி கைத்தொழில் போன்ற இதர உற்பத்திகளில் நாம் கவனம் செலுத்த வசதி ஏற்பட்டுள்ளது.

நாட்டின் உணவுப் பெருக்க முன்னணியில் சென்னை ராஜ்யம் செய்திருக்கும் சேவை மிகவும் பாராட்டற்குரியது. 1949–50-ல் ஆந்திராவுடன் கூடிய சென்னை ராஜ்யத்தின் உணவு தானிய உற்பத்தி 71 லட்சம் டன். அது 1953–54-ல் 88 லட்சம் டன் ஆக அதிகரிக்கப்பட்டது. 1949–50-ல் இங்கு 248 லட்சம் ஏக்கரில் உணவு தானியம் சாகுபடியாயிற்று. 1953–54-ல் அந்த விஸ்தீர்ணம் 261 லட்சம் ஏக்கராக அதிகரித்தது. 1953–54-ல் பருவ மழையும் உதவியாக இருந்ததென்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விசேஷ நடவடிக்கைகள்தான் இந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம். சென்ற 10 வருஷங்களில் 1953–54-ம் ஆண்டில்தான் சென்னை ராஜ்யத்தில் அதிகப்படியான நெல் விளைந்திருப்பதாய் திட்டக் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது.

விவசாயத்துக்கு, ரசாயன, குப்பை, தழை உர வகைகளை விநியோகித்தல், வாடகைக்கும், தவணை விற்பனைக்கும் யந்திர கலப்பைகள், பம்பு செட்டுகள் வழங்கல், குள மராமத்து போன்ற சிறிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல், பருத்தி உற்பத்தியைப் பெருக்கல், கரும்புப் பயிர் ஆராய்ச்சி போன்ற பல் வேறு வேலைகள் இத்தலைப்பின் கீழ் வரும் முக்கிய திட்டங்கள். இதன் விவரம் வருமாறு :—



டிராக்டர் உதவியுடன் பரம்படித்தல்: இவைகளும் விவசாய பண்ணைகளில் உள்ளன.

**ரசாயன உர விநியோகம்.**

நம் ராஜ்ய சர்க்காரின் முதலாவது மூன்று வருஷ திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அளவு.

| | | | அமோனியம் சல்பேட். | சூப்பர் பாஸ்பேட். |
|---|---|---|---|---|
| | | | (டன்.) | (டன்.) |
| 1949-50 | .. | .. | 45,000 | 25,061 |
| 1950-51 | .. | .. | 120,000* | 25,000 |
| 1951-52 | .. | .. | 116,000† | 28,000 |

* உணவுப் பயிர்களுக்குமட்டும் உரக் கலவைப் பண்ணைகள் தவிர.)

† கரும்புக்கும் பருத்திக்கும் ஒதுக்கப்பட்டது நீங்கலாகவும் உரக்கலவைப்பண்ணைகளை உள்ளடக்கியும்.

திட்டத்தின் இரண்டு வருஷங்களில் உபயோகிக்கப்பட்ட அளவு விவரம் :—

| | | | அமோனியம் சல்பேட். | சூப்பர் பாஸ்பேட். |
|---|---|---|---|---|
| | | | (டன்.) | (டன்.) |
| 1949-50 | .. | .. | 53,698 | 14,321 |
| 1950-51 | .. | .. | 83,188 | 13,968 |

தொடர்ந்து சில ஆண்டுகளாகப் பருவ மழை காலா காலத்தில் பெய்யாததாலும் போதிய அளவுக்கு மழை இல்லாததாலும் 1950-51-ல் அமோனியம் சல்பேட் எதிர் பார்த்த அளவுக்கு உபயோகப் படவில்லை.

மூன்று வருஷத் திட்டத்தின் கடைசி வருஷம் தேசிய ஐந் தாண்டுத் திட்டத்துடன் சேர்ந்து விட்டது. அந்தத் திட்டத்தின்படி சென்னை ராஜ்யத்துக்கு விநியோகிக்க உத்தேசிக்கப்பட்ட உரம்.

| | அமோனியம் சல்பேட். (டன்.) | சூப்பர் பாஸ்பேட். (டன்.) |
|---|---|---|
| 1951-52 .. .. | 116,000 | 28,000 |
| 1952-53 .. .. | 120,000 | 33,900 |
| 1953-54 .. .. | 130,000 | 33,900 |
| 1954-55 .. .. | 140,000 | 33,900 |
| 1955-56 .. .. | 150,000 | 33,900 |

மேலே கூறப்பட்ட உரம் உணவுப் பயிர்களுக்கு மட்டுந்தான். வாணியப் பயிர்களுக்கும் உரக் கலவைப் பண்ணைகளுக்கும் கிடையாது.

அவற்றிற்கு மொத்தமாக ஐந்து வருஷங்களுக்கும் சேர்ந்து 50,000 டன் அமோனியம் சல்பேட்டும் 15,000 டன் சூப்பர்பாஸ்பேட்டும் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டது.

ஆந்திராவுடன் கூடிய ராஜ்யத்தில்,

| | அமோனியம் சல்பேட். (டன்.) | சூப்பர் பாஸ்பேட். (டன்.) |
|---|---|---|
| 1951-52-ல் .. .. | 80,401 | 13,983 |
| 1952-53-ல் .. .. | 84,888 | 7,762 |

உரம் உணவுப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்டது.

ஆந்திரா நீங்கலாகவுள்ள சென்னை ராஜ்யத்தில்,

| | அமோனியம் சல்பேட். (டன்.) | சூப்பர் பாஸ்பேட். (டன்.) |
|---|---|---|
| 1951-52-ல் .. .. | 49,012 | 8,206 |
| 1952-53-ல் .. .. | 46,758 | 3,572 |
| 1953-54-ல் .. .. | 67,533 | 4,306 |

உரம் உணவுப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்டது.

இந்த வருஷங்களில் ஏற்பட்ட அதிக உற்பத்தியும், விளைச்சல் பூமி விஸ்தீர்ணமும் வருமாறு :—

| | அதிக உணவு தானிய உற்பத்தி. (டன்.) | விளைச்சல் பூமி விஸ்தீர்ணம். (ஏக்கர்.) |
|---|---|---|
| 1951-52 .. .. | 104,862 | 1,372,336 |
| 1952-53 .. .. | 96,493 | 1,309,224 |
| 1953-54 .. .. | 138,654 | 1,890,924 |

வாணிபப் பயிர்களுக்கும், உரக்கலவைப் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்பட்ட அமோனியம் சல்பேட் விவரம் :—

| | 1951-52. (டன்.) | 1952-53. (டன்.) |
|---|---|---|
| 1 உரக்கலவைப் பண்ணைகளுக்கு .. .. | 16,733 | 5,759 |
| 2 பருத்தி .. .. .. | 1,000 | 176 |
| 3 கரும்பு .. .. .. | 3,000 | 844 |
| 4 புகயிலை .. .. | .. | .. |
| மொத்தம் .. | 20,733 | 6,779 |

தற்போதுள்ள சென்னை ராஜ்யத்தில் உணவுப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்ட ரசாயன உர விவரம் :—

| | அமோனியம் சல்பேட். (டன்.) | சூப்பர் புாஸ்பேட். (டன்.) |
|---|---|---|
| 1948-49 .. .. | 32,045 | 4,067 |
| 1949-50 .. .. | 29,292 | 5,958 |
| 1950-51 .. .. | 48,454 | 8,023 |

1954-55-க்கு இந்த ராஜ்யத்தில் அமோனியம் சல்பேட், உணவுப் பயிர்களுக்கு 65,000 டன்னும், வாணிபப் பயிர்களுக்கு 3,000 டன்னும், உரக்கலவைப் பண்ணைகளுக்கு 7,000 டன்னும் விநியோகிக்க நிச்சயிக்கப்பட்டுள்ளது. 2,016,000 ஏக்கர் நிலம் சாகுபடியாகுமென்றும் 144,000 டன் தானியம் அதிகப்படியாகப் உற்பத்தியாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ரெவினியூ போர்டும் ஜில்லாக் கலெக்டர்களும் அமோனியம் சல்பேட்டை விநியோகிப்பார்கள். 1955-ம் வருஷத்தில் அமோனியம் சல்பேட் உணவுப் பயிர்களுக்கு 80,000 டன்னும், வாணிபப் பயிர்களுக்கு 5,000 டன்னும், உரக் கலவைப் பண்ணைகளுக்கு 27,000 டன்னும் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 2,996,000 ஏக்கர் நிலம் சாகுபடியாகுமென்றும், 214,000 டன் அதிகப்படியான உணவு தானியம் உற்பத்தியாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நிலத்துக்கு உரமிடுவதில் நம் ராஜ்யம் ஒரு வழி காட்டியாய் மட்டும் நின்று விடாமல் ஓர் எக்கர் நிலமும் போதுமான, அளவு உரம் பெருமல் போகாத அளவுக்குத் துரிதமாய் முன்னேறும்.

**ஆயில் இன்ஜின்கள், பம்ப் செட்டுகள் விநியோகம்.**

அரசாங்க உதவியை எதிர்பார்க்கும் விவசாயிகளுக்கு ஆயில் இன்ஜின்களும், மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளும் விநியோகிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஆனல் உதவி கோருகிறவர்கள், 15 எக்கர் நன்செய்யோ அல்லது 45 எக்கர் புன்செய்யோ உடையவர்களாயிருக்கவேணடும். இவற்றின் விலே மூன்று அல்லது ஐந்து வருஷங்களில் சுலபத் தவணைகளாய்க் கொடுக்கப்பட வேண்டும். 4 சத விகித வட்டியும், நிர்வாகச் செலவுக்கு 3 சத விகிதமும் சேர்த்து வசூலிக்கப்படும்.

1949-50-க்கு 1,000 ஆயில் இன்ஜின்களும் 300 மின்சார மோட்டார்களும் உதவுவது என்ற திட்டம் 1949-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1950-51-க்கு 1,240 ஆயில் இன்ஜின்களும் 200 மின்சார மோட்டார்களும், 1951-52-க்கு 625 ஆயில் இன்ஜின்களும், 189 மின்சார மோட்டார்களும், ஒதுக்கப்பட்டன. 1953 செப்டம்பர் 30-ந் தேதி முடிய சென்னே ராஜ்யத்தில் மொத்தம் 1,571 ஆயில் இன்ஜின்களும், 411 மின்சார மோட்டார்களும் விநியோகிக்கப்பட்டன.

மின்சார சக்தி உபயோகித்து நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதை விஸ்தரிப்பது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஓர் அம்சமாகும். எனவே இதற்கு இந்திய சர்க்கார் ஆண்டுதோறும் பணம் கடன் கொடுக்கின்றனர். 1952-53 இரண்டாவது அரை வருஷம் முதல், ஆந்திர ராஜ்யப் பிரிவினே மற்றும் சில காரணங்களே முன்னிட்டு த்திட்டம் தாமதப்பட்டது, மீண்டும் 1954-55-ல் அந்தக் கடன் ஒதுக்கப்பட்டது, அதன்படி 1954-55-க்கு 617 ஆயில் இன்ஜின்களும், 311 மின்சார மோட்டார்களும் விநியோகிப்பதென நிர்ணயிக்கப்பட்டது. 1954 அக்டோபர் முடிய 71 ஆயில் இன்ஜின்களும், 47 மின்சார மோட்டார்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் விவசாயிகளால் பெரிதும் விரும்பப் படுகிறது. 1954 ஜனவரி முதல் அக்டோபர் வரை ஆயில் இன்ஜின்கள் வேண்டுமென 2,671 விண்ணப்பங்களும், மின்சார மோட்டார் கோரி 105 விண்ணப்பங்களும் விவசாய இலாகாவுக்கு வந்திருக்கின்றன.



ஜப்பானியமுறை சாகுபடி—இந்தப் புதுமுறை நம் ராஜ்யத்தில் துரிதமாய்ப் பரவி வருகிறது.

**செய்து காட்டும் மேஸ்திரிகள், பீல்ட்மென் பயிற்சி.**

விவசாயப் பிரசாரஞ் செய்ய 1950-ல் சென்னை ராஜ்யத்தில் (ஆந்திரா சேர்ந்து) 509 பீல்ட்மென்னும், 905 செய்து காட்டும் மேஸ்திரிகளும் இருந்தனர். அது போதாதென்றும் குறைந்த பட்சம் 20 கிராமங்களுக்கு ஒரு மேஸ்திரியும் 40 கிராமங்களுக்கு ஒரு பீல்ட்மேனும் அவசியமென்று கருதப்பட்டது.

1953-54 வரை 55 பீல்ட்மென்னும், 360 மேஸ்திரிகளும் பயிற்சியளிக்கப்பட்டார்கள். 1954-55லும் இப்பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதா என்பது ஆலோசிக்கப்படுகிறது.

பருத்தி உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்—லட்சியக் குறியும்—நிறைவேறியதும்.

| | லட்சம் ஏக்கர். | லட்சம் பேல்கள். | |
|---|---|---|---|
| 1950-51 (ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிப்பற்குமுன்). | 7·45 | 2·27 | பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை 1950-51 |
| 1955-56 முடிவில் ஏற்படவேண்டிய லட்சியக்குறி. | 9·94 | 3·57 | .... |
| 1953-54 முடிய ஏற்பட்ட அபிவிருத்தி திட்டப்படி, 1954-55. | 8·48 | 2·62 | புள்ளி விவர டைரக்டரின் அறிக்கை. |
| 1955-56 லட்சியக்குறி .. .. | 0·84 | 0·86 | இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து. |

**கரும்பு ஆராய்ச்சித் திட்டங்கள்.**

ஆந்திர பிரிவினைக்குப்பின் சென்னை ராஜ்யத்தில் ஒரு பிரதான கரும்பு ஆராய்ச்சி நிலையம் இல்லாது போயிற்று. குடியாத்தத்தி லுள்ள உப நிலையம் அந்தக் குறையை ஓரளவுக்குத் தீர்த்து வருகிறது.

கோயம்புத்தூரிலிருந்து கொண்டுவரப்பட்டு பரிசீலனை செய்யப் பட்ட கோ-419, கோ-449, கோ-527 ரகங்கள் நன்கு பிரபலமடைந்து வருகின்றன.

ஐந்தாண்டுத் திட்டத்தில் கரும்பு ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 56,760-ல் இதுவரை ரூ. 45,203 செலவாகியிருக்கிறது.

**கரும்பு அபிவிருத்தித் திட்டங்கள்.**

கரும்பு அபிவிருத்தியாகும் இடங்கள் வருமாறு :—

**நெல்லிக்குப்பம் பிரதேசம்.**

| ஜில்லா. | தாலூகா. |
|---|---|
| தென் ஆற்காடு .. .. | 1 கடலூர். |
| | 2 விழுப்புரம். |
| | 3 விருத்தாச்சலம். |
| வட ஆற்காடு .. .. | 1 குடியாத்தம். |
| | 2 வேலூர். |
| மதுரை .. .. .. | நிலக்கோட்டை. |

**குளித்தலை பிரதேசம்.**

| | |
|---|---|
| திருச்சிராப்பள்ளி .. | 1 கரூர். |
| | 2 அரியலூர். |
| கோயம்புத்தூர் .. .. | 1 உடுமலைப்பேட்டை. |
| | 2 கோயம்புத்தூர். |
| தென் கன்னடம் .. .. | 1 மங்களூர். |
| | 2 குண்டபூர். |

அபிவிருத்திப் பிரதேசத்தில் கரும்பு உற்பத்தியை 10 சத விகிதம் அதிகரிக்கச் செய்வதே திட்டத்தின் நோக்கமாகும். தாலூகாகளில் விஸ்தரிப்பு வேலையை நடத்துவதுடன் ஒவ்வொரு பிரதேசத் தலைமை நிலையத்திலும் ஒரு கரும்புப் பண்ணை நடத்தப்படும். அந்தப் பண்ணைகளில் கரும்பு உற்பத்தி அபிவிருத்தி முறைகள் நடத்திக் காட்டப்படும்.

கரும்பு உற்பத்தியாளர்களைச் சந்தித்து அவர்களுக்கு உற்பத்தி முறைகளைப்பற்றிப் பிரசாரஞ்செய்வது மூலம் விஸ்தரிப்பு வேலை நடை பெறுகிறது. அதனால் ஏற்பட்ட அபிவிருத்தி விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன :—

| | அபிவிருத்தி இனங்கள். | எட்டிய அளவு. | 1954 அக்டோபர் வரை பூர்ண அபிவிருத்தி. | அபிவிருத்தி சதவிகிதம். |
|---|---|---|---|---|
| 1 | முதலாவது சாகுபடி பிரதேசம் .. .. .. | 71,700 | 30,138 | 55·9 |
| 2 | பொறுக்குவித்து உபயோகிக்கப்பட்ட பிரதேசம் .. | 69,900 | 32,494 | 46·5 |
| 3 | தழை உரம் உபயோகித்த பிரதேசம் .. .. | 26,900 | 20,326 | 75·5 |
| 4 | சரியான முறையில் நல்ல உரம் உபயோகித்த பிரதேசம். | 59,750 | 51,477 | 86·1 |
| 5 | விவசாய இலாகாவின் யோசனைப்படி உற்பத்தி செய்த பிரதேசம். | 21,500 | 14,263 | 66·3 |
| 6 | அபிவிருத்தியான வருப்பை உபயோகித்து உயர்ந்தரக வெல்லம் தயாரித்தல். | 8,495 | 5,549 | 65·4 |
| 7 | கரும்புத்தகை யை குப்பை உரமாக்குதல் .. | 3,040 | 2,844 | 93·5 |
| 8 | கருவிகள் வினியோகம் .. .. .. .. | 2,450 | 1,414 | 57·7 |
| 9 | | | | |
| 10 | | | | |
| 11 | காலத்தில் அறுவடையான பிரதேசம் .. .. | 20,000 | 9,647 | 48·2 |

## குள மராமத்து வேலைகள்.

இந்த அரசாங்கத்தின், அதிக உணவு உற்பத்தித் திட்டத்தில் குள மராமத்து வேலை ஒரு முக்கிய பாகமாக அமைந்தது.

1949 முதல் 1951-ம் வருஷம் வரை செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி, ராமநாதபுரம், தென் கன்னட ஜில்லாக்களில் ரூ. 6,35,922 செலவில் 214 குள மராமத்து வேலைகள் நடந்தன. இதனால் 7,997 எக்கர் அதிக ஆயக்கட்டு பயனடைந்தது. 5,164 டன் அதிகப்படியான உணவு தானியம் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்டது. 1951-52-ல் அதே ஜில்லாக்களில் ரூ. 11,22,386 செலவில் 291 குள மராமத்து வேலைகள் நிறைவேறின. அதிக ஆயக்கட்டு 11,958 எக்கர். எதிர்பார்த்த அதிக உற்பத்தி 6,572 டன். 1952-53-ல் ரூ. 21,44,622 செலவில் 710 வேலைகள் நடந்தேறின. அதிகப்படியான ஆயக்கட்டு 34,548. எதிர்பார்த்த அதிக உற்பத்தி 16,494 டன்.

1953-54-ம் வருஷத்தில் புது வேலைகள் ஒன்றும் மேற்கொள்ளப் படவில்லை. பூர்த்தியாகமல் பாக்கியிருந்த 280 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அதற்குச் செலவு ரூ. 20,07,868. அதிக ஆயக்கட்டு 13,949. அதிக உற்பத்தி 6,961 டன். அதே வருஷத்தில் ஒரு லட்ச ரூபாய் செலவில் 97 சிறிய பாசன வேலைகள் நிறைவேறின. அதிக ஆயக்கட்டு 2,615 எக்கர். எதிர்பார்த்த அதிக உற்பத்தி 1,313 டன்.



புதுமாதிரி பில்டர் பாயின்ட் குழாய்கிணறு—மாடு இழுப்பது.

## கிணறு வெட்டக் கடனுதவித் திட்டம்

கிணறு வெட்டக் கடனுதவி செய்யும் திட்டம் 1951-52 இறுதியில் கைவிடப்பட்டது. ஏற்கனவே கடன் உதவி கொடுக்கப்பட்ட கிணறுகளைப் பூர்த்தி செய்வது கவனிக்கப்பட்டது.

1951-52-ம் வருஷத்துக்கு ஒரு புதுத்திட்டம் ஏற்பட்டது. அதன்படி ரூ. 26·45 லட்சம் விவசாயிகளுக்கு 5,645 கிணறுகள் வெட்டக் கடனுதவி செய்யப்பட்டது.

## கூட்டுறவு சங்கங்கள் மூலம் தீவிர உணவு தானிய உற்பத்தி

கூட்டுறவு முறையில் தீவிர தானிய உற்பத்தி கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தென் கன்னடம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில நடைபெற்றது. கூட்டுறவு சங்கங்கள் உரங்களையும், விவசாயக் கருவிகளையும் விநியோகித்தனர்.







## கால்நடை அபிவிருத்தி

இந்தத் தலைப்பின்கீழ், பல கிராமங்களுக்குச் சேர்ந்து ஒரு கிராமத்தில் அபிவிருத்தி வேலைகளைச் செய்தல், செயற்கை முறையில் கருத்தறிக்கச் செய்வது, கோழிப்பண்ணை, கால்நடை ஸ்தாபனங்கள் முதலியவற்றை விஸ்தரிக்கும் ஏற்பாடுகள் வந்தன. ஜில்லா தலைமை கால்நடை ஆஸ்பத்திரிகளிலும் கோழிப்பண்ணைகளிலும் மைக்கிராஸ்கோப்பும், இதர லாபரட்டரி வசதிகளும் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. லட்சியக் குறியான 24 புது ஆஸ்பத்திரிகளில் 6 திறக்கப்பட்டுள்ளன.



நம்மிடம் ஏராளமான கால்நடைகள் இருக்கின்றன. அவற்றை ஆரோக்கியத்துடன் வைத்துக்கொள்வதுதான் பிரச்னை.






# மீன் இலாகா

மீன் பண்படுத்தும் நிலையங்களுக்கு உப்பைக் குறைந்த விலைக்குக் கொடுத்தல், ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் அபிவிருத்தி, மீன் குஞ்சுகள் சேகரம், விநியோகம், விரைவாய்ச் செல்லத்தக்க போக்குவரத்து வசதிகள், மீனைப் பத்திரப்படுத்த ஐஸ் இயந்திர வசதி, இவையே இந்தத் தலைப்பின் கீழ்வருவன. விவரம் வருமாறு :—

| திட்டங்கள். | செலவு (1951–56) லட்சக் கணக்கில் ரூபாய். | லட்சிய அளவு. |
|---|---|---|
| **நிலத்தில் உள்ள நீர் நிலைகளில் மீன் பிடிப்பது.** | | |
| 1 தீவிர வித்துசேகரம் விநியோகம். | 6·0 | 16 கோடி வித்து. |
| **கடலில் மீன் பிடிப்பது.** | | |
| 2 ரக அபிவிருத்தி .. .. | 3·2 | 621½ டன். |
| 3 உப்பு உதவி .. .. .. | 19·3 | 303,500 டன். |
| 4 ஆழக்கடல் மீன் பிடிப்பு .. | 9·2 | 1,060 டன். |
| 5 மீனைக் கெட்டுப்போகாமல் வைத்து எடுத்துப்போகுதல் (ஐஸ் இயந்திரம் குளிர்ந்த அறை. | 3·5 | 1954 மத்தியில்தான் இயந்திர ஸ்தாபிதம் பூர்த்தியாயிற்று. |

**மீன் பிடிப்போர் நலன்.**

| திட்டங்கள். | செலவு (1951 56) லட்சக் கணக்கில் ரூபாய். | லட்சிய அளவு. |
|---|---|---|
| 6 வேகமான போக்குவரத்து வசதி | 1·9 | 7,900 டன். |
| 7 சர்க்கார் உதவியுடன் குறைந்த விலையில் சாமான்கள். | 5·6 | |
| **சேவையாளர்.** | | |
| 8 தலைமை காரியாலய சேவையாளர் திட்டம். | 0·3 | இது முற்றிலும் வேலை நிலைமையைப் பொறுத்தது. |
| மொத்தம் | 49·0 | |

மீன் குஞ்சுகள் சேகரித்து வினியோகிக்கும் திட்டத்தின்படி வருஷத்தில் 5 கோடி குஞ்சுகள் சேகரிக்கவேண்டும். காயல் தண்ணீர் 2½ லட்சம் ஏக்கர் வரை மீன் வளர்ப்புக்கு உபயோகப்படுத்த உத்தேசம். திட்ட காலத்திற்குள் அந்த தண்ணீரில் 50,000 டன் மீன் கிடைக்குமென மதிப்பீடு.

வேகமாக மீன் பிடிக்கச் செல்வதற்கு விசை பொருத்திய படகு ஏற்பாடு செய்ய சர்க்கார் முயற்சித்தனர். அதன் விளைவாகப் பரிசீலனைகள் செய்து "எம். பி. அஜித்" என்ற படகு சொல்பமான விலையில் கட்டப்பட்டது. பிறகு 1950–51–ல் 6-உம் 1951–52–ல் 5–மாக 11 படகுகள் உபயோகத்துக்கு விடப்பட்டன. இந்தப் படகுகள் இலாகாவினால் உபயோகப்படுத்தப்படும் அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கு சொல்ப வாடைக்குக் கொடுக்கப்படும்.

எப். ஏ. ஓ. வின் தொழில் நுட்ப உதவி விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் ஒரு டானிஷ் மீன் பிடிக்கும் படகும் மற்றொரு சூயஸ்டைப் படகும் மீன் பிடிப்பு வேலையிலிருக்கின்றன.

விற்பனையாகாத மீனைப் பண்படுத்திவைக்க 47,070 டன் நல்ல உப்பு 1953–54–ல் விநியோகக்கப்பட்டிருக்கிறது. 1951–52 முதல் 1955–56 வரை உப்பு விநியோக லட்சிய அளவு 3,03,500 டன்.

மங்களூரில் ஒன்றும், மேற்குக் குன்றில் (மலையாளம் ஜில்லா) ஒன்றுமாக இரண்டு குளிர்ந்த அறைகள் சமீபத்தில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன.

மீன் எடுத்துச் செல்ல 6 வான்க்ள் வேலை செய்கின்றன. கட்ட மரத்துண்டுகள், கப்பல் பாய்கள், வலை நூல் முதலியவற்றை சர்க்கார் உதவியுடன் குறைந்த விலைக்கு விற்க 30 டெப்போக்கள் நிறுவப்பட்டுள்ளன.

1951-52, 1952-53-ம் வருஷங்களில் இந்த டெப்போக்கள் மீன் பிடிப்பவர்களுக்கு நல்ல உதவி செய்தன. ஆனால் நாட்டில் நூல் நிலைமை திருப்தியடைந்தவுடன் 1953 எப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. இருந்தாலும் தகுதியுள்ள மீன் பிடிப்பவர்களுக்கு விசேஷ உதவி செய்யப்படுகிறது.



ஆழக்கடல் மீன் பிடிப்பு.—இதற்கு அரசாங்கம் உதவியளிக்கிறார்கள்.

 


## காடுகள்

ராஜ்யத்தின் யுத்த பிற்கால புனருத்தாரண திட்டத்தில், பஞ் சாயத்துக் காடுகள் நிர்வாகம், நீலகிரியில் நில அரிப்பு பாதுகாப்பு, திட்ட வேலை வட்டாரம், காட்டு ரஸ்த்தா அபிவிருத்தி, சவுக்கு சாகுபடி விஸ்தரிப்பு முதலிய வேலைகள் முக்கியமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டம் வந்தவுடன் மேலே சொல்லப்பட்ட எல்லா அலுவல்களும் அதில் சேர்ந்து விட்டன. 1953-54-ல் மேலும் நான்கு திட்டங்கள், விறகுக்கான பிரதேசத்தை விருத்தி பண்ணுவது, மிருதுவான மரங்களை வளர்ப்பது, காட்டில் மேய்ச்சல் பூமியை அதிகரிப்பது, குடியிருப்பு வீட்டு வசதிகள் செய்வது, முதலியன ஆரம்பிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது மற்றும், (1) புது ரஸ்தாக்கள் அபிவிருத்தி, (2) மேலும் காடுகளை ரிசர்வ் செய்வது, (3) காட்டு மேய்ச்சல் வசதியை அபிவிருத்தி செய்வது, (4) குடியிருப்பு வீட்டு வசதி, இத்திட்டங்கள் மிகவும் அவசியமெனக் கருதப்பட்டிருக்கின்றன. திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன. வேலை ஆரம்பிக்கவிருக்கிறது.

வேலை ஆரம்பிக்கப்பட்ட 4 திட்டங்களின் விவரம் வருமாறு :—

**விறகுக்காடு விஸ்தரிப்பு.**

1953-54 வரை, ராஜ்யத்தில் ஏராளமாக இருந்து வந்த விறகுக் காடுகளில் மரம் அழிந்து போகாமல் கவனித்துக் காட்டை அபிவிருத்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கம். 1953-54-ல் 10,500 ஏக்கரும், 1954-55, 1955-56 ஒவ்வொரு வருஷத்திலும் 18,000 ஏக்கரும் காடாகச் செய்யத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1953-54-ல் 7,978 ஏக்கர் மரம் பயிராயிற்று. 14,700 ஏக்கரில் 1954-55-ல் மரம் நட ஏற்பாடு செய்யப்படுகிறது.

**மிருது மர வளர்ப்பு:**

மிருதுவான மரங்கள் தீக்குச்சி செய்யுந் தொழிலுக்கும் ஒட்டுப் பலகைத் தொழிலுக்கும் உபயோகமாகின்றன. இந்தத் தொழிலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மிருது மர வளர்ப்பை மேற்கொள்ள இந்திய சர்க்கார் உதவி செய்ய இசைந்திருக்கிறார்கள். முதலாவதாக 1952-53-ல் மேற்குக் கடற் கரையில் 250 ஏக்கரில் இத்தகைய மரம் பயிராக்கப்பட்டது. இப்பொழுது இந்த அலுவல் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1953-54-ல் 150 ஏக்கர் பயிரானது.

ஐந்தாண்டுத் திட்டத்தையும், இந்திய சர்க்கார் உதவித் திட்டத்தையும் இணைத்து 1,200 ஏக்கரில் மிருது மரம் நட ஏற்பாடாகியிருக்கிறது.

**தரிசுச் சரிவில் மரம் வளர்த்தல்.**

நீலகிரி, பழனி மலைகளிலுள்ள சில தரிசுச் சரிவுகளில் மண் அரிப்பைத் தவிர்க்க மரங்கள் வளர்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதனால் பாசனக் குளங்களில் மண் ஏறுவதும் தடுக்கப்படுகிறது.

இந்தத்திட்ட அலுவல்கள் :—

1 நீலகிரியிலும் பழனி மலையிலும் யூகாலிப்ட்ஸ் மரங்கள் நடல்.

2 வாட்டில் பட்டை மரம் நடல்.

3 தேக்கு மரங்களை முக்கியமாய் தென் கன்னடா, வைநாடு மற்றும் மலையாள ஜில்லாவில் பயிரிடுதல்.

4 தொழிலாளர்களுக்கு வசதியளித்தல்.

5 முதல் மூன்று அலுவல்களுக்கும் போக்கு வரத்து வசதியளித்தல்.

**1,000 ஏக்கரில் பயிர் ஏற்பாடாகியுள்ளது.**

வாட்டில், நீலகிரியிலும், பழனி மலையிலும் மட்டும் பயிராகின்றது. பயிரான பிரதேசம் :

நீலகிரி 2,187 ஏக்கர். பழனி 2,669 ஏக்கர். 300 ஏக்கரில் தேக்கு பயிர் ஏற்பாடு நடந்து வருகிறது.

**குட்டைக் குன்று பிரதேசங்களில் மண்ணரிப்புத் தடை.**

குட்டைக் குன்றுகளாயுள்ள காட்டுப் பிரதேசங்களில் மண்ணரிப்புத்தடை வேலைகளை மேற் கொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1954-55, 1955-56 ஒவ்வொரு வருஷத்திலும் 2,000 ஏக்கர் விஸ்தீர்ணத்தில் மண்ணரிப்புத் தடை வேலை நிறைவேற்ற நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 50 ஏக்கர் வட்டாரங்களாய்ப் பிரித்து வேலை மேற்கொள்ளப்படும். சேலம், கோயம்புத்தூர், உதகமண்டலம் முதலிய இடங்களில் மொத்தம் 40 வட்டாரங்கள் இருக்கின்றன. 1954 ஏப்ரல் 30-ந் தேதி இந்த வேலை ஆரம்பமாகியிருக்கிறது.






## கைத் தொழில்கள்

கைத்தொழில் தலைப்பின்கீழ் ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்ற 10 திட்டங்கள் வகுக்கப்பட்டன—

(1) கைத்தொழில் வர்த்தக இலாகா ஜில்லா நிர்வாக அமைப்பைத் திருத்தி அமைப்பது.

(2) பல தொழில் நுட்ப பயிற்சிப்பள்ளி துவக்கல்.

(3) தோல் தொழில் ஸ்தாபனத்தை, தோல் தொழில் நுட்ப ஸ்தாபனமாக விஸ்தரித்தல்.

(4) ட்ரிலர், உதவி ட்ரிலர் பயிற்சியளித்தல்.

(5) ரசாயனப் பரிசீலனை லாபரட்டரி ஒன்று ஸ்தாபித்தல்.

(6) கோழிக்கோட்டில் எண்ணெய் கட்டியாக்கவும் சுத்தஞ் செய்யவும் தொழிற்சாலை.

(7) சர்க்கார் கைத்தொழில் இன்ஜினீயரிங் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்.

(8) கூனூர் பட்டு விகேச்சர்கட் கைத்தொழிலை விஸ்தரித்தல்.

(9) கொள்ளேகாலம் பட்டு நூல் தொழிற்சாலையில் நூல் திரிக்கும் யந்திரம் ஸ்தாபித்தல்.

(10) கோழிக்கோடு கேரள சோப் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்தல்.

திட்டத்தின் முதலாவது 3 வருஷத்தில் மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கு ரூ. 78 லட்சம் செலவாகி இருக்கிறது. இது மொத்த லட்சிய அளவில் 61 சத விகிதமாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி பரிசீலனை ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. பூர்வாங்கப் பரிசோதனைகள் முடிந்துவிட்டன. வர்த்தக முறைப் பரிசீலனை கவனிக்கப்படுகிறது.



சென்னை பலதொழில் நுட்பபயிற்சி நிலையம லினோ யந்திரம்.

திட்டங்களின் விவரங்கள் :—

**இலாகா ஜில்லா நிர்வாகத்தைத் திருத்தி அமைத்தல்.**

சென்னை ராஜ்யத்தில் கைத்தொழில் வர்த்தக இலாகாவில் 1951 டிசம்பருக்கு முன்னால், தஞ்சாவூரில் ஒருவரும் கோயமுத்தூரில் ஒருவருமாக இரு உதவி கைத்தொழில் இஞ்ஜினீயர்களும், திருநெல்வேலி, மதுரை, சென்னை, வேலூர், கோழிக்கோடு ஆகிய இடங்களில் 5 ஜில்லா கைத்தொழில் அதிகாரிகளும் இருந்தார்கள். அதிகரித்துக் கொண்டு வரும் இஞ்ஜினீயரிங் அலுவல்களை முன்னிட்டு

ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் 1951 டிசம்பரில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. அதன்படி உதவி கைத்தொழில் இன்ஜினீயர் பதவிகளையும், ஜில்லா கைத்தொழில் அதிகாரி பதவிகளையும் ரத்து செய்துவிட்டு அவர்களுக்குப் பதில் இன்ஜினீயரிங் படிப்புள்ள 7 கைத்தொழில் உதவி டைரெக்டர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு உதவி டைரெக்டருக்கு இரண்டு ஜில்லாக்கள் ஒதுக்கப்பட்டன.

**பல தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி**

1946-ம் வருஷத்துக்கு முன்னால் சென்னை, மதுரை, கோழிக்கோடு, மங்களூர் முதலிய இடங்களில் 4 கைத்தொழில் பள்ளிகள் இருந்தன. தொழில் நுட்ப பயிற்சியாளர்களுக்கு ஏற்படும் தேவையை அனுசரித்து பிரதேச வாரியாக சென்னை, மதுரை, கோயமுத்தூர், கோழிக்கோடு, மங்களூர் இவ்விடங்களில் 5 பல தொழில் நுட்பப் பயிற்சி பள்ளிகளை அமைக்க சர்க்கார் உத்தரவிட்டனர். இவை அங்கிருந்த கைத்தொழில் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டன. இது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

பல தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகளில் 26 டிப்ளமோ வகுப்புகளும், 72 சர்ட்டிபிகேட் வகுப்புகளும் நடத்தவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு 1956-ம்வரை லட்சிய காலமாக நிர்ணயிக்கப்பட்டது. அவற்றில் 22 டிப்ளமோ வகுப்புகளும், 33 சர்ட்டிபிகேட் வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. மற்றவையும் 1956 முடிவுக்குள் ஆரம்பமாகிவிடுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**தோல் தொழில் நுட்ப ஸ்தாபனம்**

1946-ம் ஆண்டுக்கு முன்னால் தோல் வர்த்தக ஸ்தாபனம் மாணவர்களுக்கு தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்வது, தோல் ஆராய்ச்சி முதலிய துறைகளில் ஓர் அளவுக்குப் பயிற்சி அளித்து வந்தது. 1946-ல் சர்க்கார் அந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை விஸ்தரித்து அதற்கு தோல் தொழில் நுட்ப பயிற்சி ஸ்தாபனமெனப் பெயர் வழங்கினர். மாணவர்களை டிப்ளமோ, சர்டிபிகேட் வகுப்புகளுக்குப் பயிற்சியளிப்பதுடன் இந்த ஸ்தாபனம் தோல் தொழில் சம்பந்தமான பல்வேறு ஆராய்ச்சிகளையும் செய்கிறது.

**டிரிலர், உதவி டிரிலர் பயிற்சி**

ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் 50 பேர்களை டிரிலர்களாகவும், உதவி டிரிலர்களாகவும் பயிற்றுவித்து இலாகாவிலேயே சேர்த்துக் கொண்டனர். இத்திட்டம் 1951-52-ம் வருஷத்திலேயே பூர்த்தியாகிவிட்டது.

**ரசாயன லாபரட்டரி நிறுவல்**

ராஜ்யத்தின் ஏராளமான சுரங்கப் பொருள் செல்வ நிலைமையை உத்தேசித்து அவை சம்பந்தமான விஷயங்களை அவ்வப்போது கவனிக்க 1944 அக்டோபரில் ஒரு பரீக்ஷார்த்த லாபரட்டரி (ரஸாயன பரிசீலனைச் சாலை) அமைக்கப்பட்டது. 1947-ல் நிறுவப்பட்ட ஆராய்ச்சி ஏற்பாட்டுக் கமிட்டியின் சிபாரிசுப்படி சர்க்கார், சென்னையில் ஒரு பெரிய லாபரடரியை அமைக்க உத்தரவிட்டனர். லாபரடரி வேலை

செய்துவருகிறது. வருஷத்தில் 100 மாதிரிப் பொருள்கள் வரை பரிசீலனை செய்யவேண்டுமென்று லட்சிய அளவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு மேலும் வேலை செய்ய அந்த ஸ்தாபனம் சக்தி வாய்ந்ததாயிருக்கிறது. ஸ்தாபனத்துக்கு ஒரு புது க்கட்டிடத்தைக் கட்டும் விஷயம் கவனிக்கப்படுகிறது.

### கோழிக்கோடு எண்ணெய் கட்டியாக்கும் தொழிற்சாலை (சர்க்கார்)

இந்த தொழிற்சாலை கட்டிடம் கட்டி முடிந்துவிட்டது. வருஷத்திற்கு 3,000 டன் வனஸ்பதியும், 1,500 டன் சுத்தப்படுத்தப்பட்ட எண்ணெய்யும் உற்பத்தி செய்வது இந்த தொழிற்சாலையின் லட்சிய அளவு. பரீக்ஷார்த்தமாக இப்பொழுது இது வேலை செய்கிறது. வர்த்தக விகிதத்தில் இன்னும் வேலை தொடங்கவில்லை.

இந்த தொழிற்சாலையை சர்க்கார் குத்தகைக்குவிட உத்தேசித்திருக்கிறார்கள். அதுவரை சர்க்கார் எண்ணெய் தொழிற்சாலைக்கு வேண்டிய கடலை எண்ணெய்யை சுத்தஞ்செய்து கொடுப்பதோடு, வெளியிலிருந்து வரும் எண்ணெய்களையும் சாதாரண அளவு கட்டணத்தில் சுத்தஞ்செய்து கொடுக்கவும் சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள்.

### சர்க்கார் கைத்தொழில் இன்ஜினீயரிங் தொழிற்சாலை, சென்னை

சிறிய கைத்தொழில்களுக்கும், குடிசைக் கைத்தொழில்களுக்கும் உதவியாயிருக்கும் வகையில் சென்னை, வண்ணாரப்பேட்டையிலுள்ள கைத்தொழில் இன்ஜினீயரிங் தொழிற்சாலையை விஸ்தரிக்க சர்க்கார் நிச்சயித்துள்ளனர். இத்திட்டம் 1953-ம் ௵ மே மாதம் பூர்த்தியாகி தொழிற்சாலை எல்லாத் துறைகளிலும் வேலைசெய்கிறது. சில புது இயந்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தி அளவும் வருஷத்துக்கு ரூ. 1·25 லட்சத்திலிருந்து ரூ. 2·5 ஆக அதிகரித்திருக்கிறது.

### கூனூர் பட்டு லிகேச்சர்கட் கைத்தொழில் விஸ்தரிப்பு

ஆப்பரேஷன் சிகிச்சைகளுக்கு தைப்பதற்கு பட்டு லிகேச்சர்கட் அதிகமாய்த் தேவைப்படுவதால் அதற்குத் தக்கபடி லிகேச்சர் உற்பத்தியை அதிகரிக்க சர்க்கார் திட்டமிட்டனர். முசுக்கட்டை செடி வளர்ப்பும் அதிகரிக்கப்பட்டது. 1954-ம் வருஷத்தில் 12 முதல் 14 அங்குல நீளமுள்ள 125,000 லிகேச்சர் கட்டுகள் உற்பத்தி செய்ய லட்சிய அளவு நிர்ணயித்திருந்ததில் 1954-ம் ௵ செப்டம்பர் வரை 63,200 லிகேச்சர்கள் செய்யப்பட்டன.

1951–52 முதல் 1954 முடிய இத்திட்டத்திற்கு ரூ. 1,09,463 செலவாகியிருக்கிறது. 1958–59 வருஷத்தில்தான் 5 லட்சம் தடிப்பான ரகம் அல்லது 10 லட்சம் எல்லா ரகங்களும் என்ற லட்சிய அளவு உற்பத்தி சாத்தியமாகுமென்று சொல்லப்படுகிறது.

**கொள்ளேகாலம் சர்க்கார் பட்டு நூல் தொழிற்சாலையில் திரிக்கும் யந்திரம் அமைக்க**

கைதறிகளுக்கு பாவு பட்டு நூல் விநியோகம் செய்யும் நோக்கத்தில் நூல் திரிக்கும் யந்திரம் ஒன்றை கொள்ளேகாலம் சர்க்கார் பட்டு நூல் தொழிற் சாலையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. அமெரிக்காவிலிருந்து யந்திரம் வரவழைக்கப்பட்டு 1953 ஏப்ரல் 27உ முதல் வேலை செய்கிறது.

ஒரு ஷிப்டில் இந்த யந்திரம் 15,000 பவுண்டு திரிக்கக்கூடியது. இரண்டு ஷிப்டில் 30,000 பவுண்டு திரிக்கும். 1954 ஆகஸ்டிலிருந்து யந்திரம் இரண்டு ஷிப்டாக வேலை செய்கிறது. அதிக பட்ச அளவு உற்பத்தி நடக்கிறது.

**கோழிக்கோடு, கேரளா சோப்பு தொழிற்சாலை**

சோப்பு தொழிற்சாலையில் யந்திரங்களை மாற்றி அமைக்க ரூபாய் 1,34,200 அனுமதிக்கப்பட்டது. 1954 செப்டம்பர் 30உ வரை ரூ. 97,120 செலவாகியிருக்கிறது. பாக்கியுள்ள ரூ. 37,680-க்கு யந்திரம் தருவிக்க ஏற்பாடு நடக்கிறது.

**குடிசைக் கைத்தொழில்**

வளையல், மணிகள், கண்ணாடி பாத்திரங்கள் இவை செய்யப் பயிற்சியளிப்பதும், கிராமக் கைத்தொழில்கள், பனை வெல்லம் செய்தல், கதர் உற்பத்தி இவை எல்லாம் குடிசைக் கைத்தொழிலின்கீழ் வருவன :—

| திட்டம். | ஐந்தாண்டு லட்சிய அளவு. | முதல் 3 ஆண்டு களில் நிறை வேறியது. |
|---|---|---|
| கண்ணாடி கைத்தொழில். | 125 | 75 |
| தோல் பதனிட செய்துகாட்டும் கோஷ்டி. | 124 | 76 |
| பனைவெல்லம் அபிவிருத்தி திட்டம். | 7,200 | 7,200 |
| சர்க்கார் கதர் திட்டம் .. | கெஜம் 4,500,000 | கெஜம் 3,500,000 |
| நூற்பவர் .. .. | 40,000 | 50,000 |
| நெசவாளர் .. .. | 1,250 | 2,000 |

**குடிசைக் கைத்தொழில் கூட்டுறவு சங்கங்கள்**

தகுதியுள்ள குடிசைக் கைத்தொழில்களுக்கு, சாமான்கள் வாங்கவும், நிர்வாகம் மற்றும் செலவுகளுக்குமாக மானியங் கொடுக்க சர்க்கார் 1949-ம் ஆண்டு ரூ. 45,600-ஐ கூட்டுறவு இலாகா ரிஜிஸ்தராரிடம் ஒப்படைத்தனர். 1953–54-ல் ரூ. 8,000 இந்த வகைக்காகச் செலவு செய்யப்பட்டது.

1952–53-ல் பனை வெல்ல உற்பத்தி நிபுணர்கள் 3,468 மாஜி கள் இறக்குகிறவர்களுக்கு பனைவெல்ல உற்பத்தி சம்பந்தமான பயிற்சி யளித்தார்கள். 1,879 வட்டாரங்களிலிருந்து கூட்டுறவு சங்கத்தினர் இந்தப் பயிற்சி பெற்றனர். பயிற்சியாளர்களைத் தவிர 39,222 மாஜி கள் இறக்குகிறவர்கள் வெல்ல உற்பத்தி நிலையங்களில் வேலை செய்தார்கள்.



பத்தமடை பாய்முடைதல் ஒரு முக்கியக் கைத்தொழில்.

**கைத்தறி நெசவுக்கான இயந்திரங்கள்**

கைத்தறி ஜவுளிகளுக்கு நல்ல மெருகேற்றச் சில இயந்திரங்களை நிறுவவேண்டுமென்று சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஒரு திட்டத்தை வகுத்தனர். அதற்கு மொத்த செலவு மதிப்பீடு ரூ. 5·60 லட்சம். இந்திய சர்க்கார் கைத்தறி அபி விருத்தி நிதியிலிருந்து ரூ. 2,15,700 மானியங் கொடுத்தனர். ராஜ்ய சர்க்கார் ரூ. 1·4 லட்சம் சாங்ஷன் செய்தனர். ராஜ்ய கைத் தறிச் சங்கம், யந்திரத்தை வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின் றனர்.







## பால் பண்ணையும் பால் விநியோகமும்

சென்னை நகரில் பால் உற்பத்தியையும் விநியோகத்தையும் அதிகரிக்க சென்னை கூட்டுறவு பால் விநியோக சங்கம் லிமிடெட் சர்க்கார் உதவியுடன் ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. வெளிப் பிரதேசங்களிலிருந்து பால் சேகரஞ் செய்ய பல சங்கங்களை செங்கற்பட்டு ஜில்லாவில் இந்த சங்கம் அமைத்திருக்கிறது. 1953 ஜூன் 30உ 129 அம்மாதிரி சங்கங்களும், 24 தனிப்பட்டவர்களும் சென்னை சங்கத்தில் அங்கத்தினராயிருந்தனர். அவர்களுடைய மூலதனம் ரூ. 1·57 லட்சம்.

1952 ஜூலை முதல் தேதியிலிருந்து 1953 ஜூன் 30-ந் தேதி வரை சென்னை சங்கம் 97·26 லட்சம் பவுண்டு பால் சேகரித்து 89·93 லட்சம் பவுண்டு விற்பனை செய்திருக்கிறது.

நகர பால் விநியோக திட்டம் அமுலுக்கு வந்தபொழுது ராஜ்யத்தில் 27 பால் விநியோக யூனியனும் 335 பால் விநியோக சொசைட்டிகளும் இருந்தன. 1953 ஜூன் 30உ 41 யூனியன்களும் 740 சொசைட்டிகளும் இருந்தன. 1953 டிசம்பர் 31உ 20 யூனியன்களும் 532 சொசைட்டிகளும் ஆந்திரா நீங்கிய சென்னை ராஜ்யத்தில் இருந்தன. அவற்றின் சராசரி தின பால் உற்பத்தி 27,000 பட்டணம் படி.

 


## கூட்டுறவு

### கூட்டுறவு பண்ணைத் திட்டம்

ஐந்தாண்டு திட்டத்தின் உத்தேச வேலை முறைப்படி பொது மக்களுக்குக் கூட்டுறவுப் பண்ணை சங்க ஏற்பாடுகள் அடியிற் குறிக்கப்பட்டுள்ளன :—

1951–52 : 3 ; 1952–53 : 15 ; 1953–54 : 15 ; 1954–55 : 15 பூர்த்தியானது மொத்தம் 48.

அவற்றிற்கு மொத்தச் செலவு ரூ. 25·6 லட்சம். பின்னுல் இந்தத் தொகை ரூ. 1·5 லட்சமாகக் குறைக்கப்பட்டது.

### மாஜி ராணுவத்தினருக்கு நிலக்குடியேற்ற சங்கங்கள்

மாஜி ராணுவத்தினர் நிலக்குடியேற்றச் சங்கங்கள் 6. அவற்றின் அங்கத்தினர் 482. கொடுபட்ட பங்குத் தொகை ரூ. 2·19 லட்சம். குடியேறுகிறவர்களுக்குக் குடிசைகள் கட்டல், நிலந்திருத்தல், கிணறுகள் வெட்டல், நீர்ப்பாசன வசதிகள் செய்தல் முதலிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வையநாடு பிரதேசத்தில் 18,217 மாஜி ராணுவத்தினர் குடியேறினர். யுத்த பிற்கால ராணுவ புனருத்தாரண நிதிக் கமிட்டி அவர்களுக்கு ரூ. 38 லட்சம் மானியந் தந்தது. ரூ. 30·35 லட்சம் அவர்களிடையே விநியோகிக்கப்பட்டது. ராஜ்ய சர்க்கார் அவர்களுக்கு ரூ. 2·31 லட்சம் கொடுத்தனர்.

கூட்டுறவு முறை, சட்ட நுட்பம்பற்றிய பயிற்சி, அரசாங்க சங்கங்களுக்கு கிடங்குவசதிகள் முதலியவையும் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ந்துள்ளன.






**கூட்டுறவு முறையில் வீடுகட்டும் திட்டங்கள்**

ராஜ்யத்தில் இதுவரை வீடு கட்டும் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருமாறு :—

| | சங்கங்கள். | அங்கத்தினர். | கொடுபட்ட பங்குத் தொகை. (லட்சம் ரூ.) | பூர்த்தியான வீடுகள். |
|---|---|---|---|---|
| 1947 டிசம்பர் 3 | 126 | 9,583 | 44·01 | 1,911 |
| 1953 ஜூன் 30 | 294 | 28,892 | 161·68 | 7.006 |

1950-ல் முனிசிபல் டவுன்கள், மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு வெளியே கிராமப் பிரதேசத்தில் கிராம வீடுகட்டும் திட்டம் ஒன்றை சர்க்கார் புகுத்தினர். அதன்படி ஒவ்வொன்றும் 20 வீடுகள் கட்டத்தக்க 25 சங்கங்கள் அமைப்பதென்பது அத்திட்டத்தின் நோக்கம். தற்போது ராஜ்யத்தில் 24 சங்கங்கள் வேலே செய்கின்றன. அவற்றிற்குக் கடன் கொடுப்பதற்காக சர்க்கார் ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருக்கின்றனர்.






## சுகாதாரம்

இந்தத் தலைப்பின் கீழ் வரும் முக்கிய அம்சங்கள், நகர குடி தண்ணீர் திட்டம், சாக்கடைத் திட்டம், கிராமக் குடி தண்ணீர் திட்டம், மலேரியாத் தடுப்பு வேலைகள், உணவுச் சத்து ஆராய்ச்சி, சுகாதார சேவை விஸ்தரிப்பு, சுகாதார விசிட்டர்கள் பயிற்சி முதலியன.

நகர குடி தண்ணீர், சாக்கடை திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் ரூ. $2\frac{1}{2}$ கோடி விசேஷ கடன் உதவி தர உறுதியளித்திருக்கிறார்கள். எனவே திட்டப்படி வேலை நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது. கிராமாந்திர குடி தண்ணீர் திட்டத்தின் கீழ் மொத்தம் 14,000-க்கு 6,400 கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

1945-ல் புதுப்பிக்கப்பட்ட மலேரியா பீரோ ஐந்தாண்டுத் திட்டத்தில் கலந்துவிட்டது. ராஜ்யத்தில் மலேரியாவைப் பரவ விடாமல் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதே திட்டத்தின் நோக்கம். இது வரை 16 லட்சம் ஜனத்தொகையுள்ள 5,500 சதுர மைல் விஸ்தீர்ணத்தில் மலேரியா கட்டுப்பாட்டு வேலை நடந்திருக்கிறது. உணவு சத்து ஆராய்ச்சியும் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ந்து விட்டது.

சுகாதாரச் சேவை விஸ்தரிப்பில், பிர்க்கா அபிவிருத்தி திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட 18 பிரதான சென்டர்களும் பூந்தமல்லி சுகாதார யூனிட்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பொழுது பிரதான சென்டர்களை இடத்துக்கு இடம் செல்லும் வைத்திய நிலையமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சுகாதார பிரசார விளம்பர ஸ்தாபனத்தை விஸ்தரிப்பதும், சுகாதாரக் கண் காட்சி அமைப்பதுமான திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன.



வைத்திய மாணவர் கிராமசேவை.







## வைத்தியம்

ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், வைத்தியக் கல்வி வசதியைப் பெருக்கல், சிறிதும் பெரிதுமான ஆஸ்பத்திரிகளில் அபிவிருத்தியைச் செய்தல், வைத்திய நிவாரண விஸ்தரிப்பு, க்ஷயரோக ஆஸ்பத்திரிகளை அதிகமாக்குதல், குஷ்டரோகத் தடை நடவடிக்கைகளைத் தீவிரமாக்குதல், வைத்தியக் கல்லூரி வாசகசாலைகளை அபிவிருத்தி செய்தல், தொத்து நோய் ஆஸ்பத்திரிகள் அமைத்தல், கண் வைத்தியசாலைகளை ஏற்படுத்தல், மற்றும் பல சேவைகள் செய்ய வழி வகுக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் முக்கிய அம்சங்கள்—

(அ) வைத்தியக் கல்வி,

(ஆ) பயிற்சி,

(இ) ஆஸ்பத்திரிகள்—வைத்திய நிவாரண விஸ்தரிப்பு,

(ஈ) இதர திட்டங்கள்.

**வைத்தியக் கல்வி.**

1951-ல் ஆந்திர வைத்தியக் கல்லூரிகள் நீங்கலாக சென்னை நகரில் சென்னை வைத்தியக் கல்லூரியிலும் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரியிலுமாக 225 மாணவர்களுக்குத்தான் இடமிருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்தின்படி ஸ்டான்லி வைத்தியக்கல்லூரி அபிவிருத்தி செய்யப்படுகிறது. மதுரையில் ஒரு சிறந்த வைத்தியக் கல்லூரி திறக்கப்பட்டுள்ளது.

ஸ்டான்லி வைத்தியக் கல்லூரியில் முன்போலல்லாமல் எல்லா வைத்தியப் பாடங்களும் கற்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சானிட்டரி இன்ஸ்பெக்டர், ஹெல்த் விசிட்டர் வகுப்புகளும் அங்கேயே நடைபெறுகின்றன. திட்டத்தின்படி 1953–54 வரை இந்த அபிவிருத்திகளுக்கு ரூ. 23·95 லட்சம் செலவாயிருக்கிறது.

### மதுரை வைத்தியக் கல்லூரி.

தமிழ் நாட்டின் மத்தியில் ஒரு வைத்தியக் கல்லூரி வேண்டு மென்று 1946 முதல் முயற்சித்தும் 1954 மார்ச்சில் தான் மதுரை யில் ஒன்றைத் திறக்க அனுமதி கிடைத்தது. 1954 ஜூலை முதல் கல்லூரி வேலை செய்கிறது. ஐம்பது மாணவர்கள் படிக்கிறார்கள். திட்டம் பூர்த்தியானவுடன் இந்த கல்லூரியில் 100 மாணவர்களுக்கு இடவசதி யேற்படும்.

### பயிற்சி.

திட்டத்தின் கீழ் 100 அதிகப்படியான பிரசவ உதவி மருத்து வச்சி பயிற்சியளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. 1952-53-ல் 47 பேருடன் பயிற்சி ஆரம்பமாயிற்று. 1953-54-ல் 77 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

1951 முதல் 1953 வரையுள்ள மூன்று வருஷ காலத்தில் 220 கம்பௌண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் வருஷந்தோறும் 80 பேருக்கு சி. ஆர். ஏ. பயிற்சி அளிக்கப்படுகிறது.

### ஆஸ்பத்திரிகள்.

இந்த இனத்தில், திட்டப்படி, பல்வேறு அபிவிருத்திகள் செய்யப் படுகின்றன. திருச்சிராப்பள்ளி, கோழிக்கோடு, தூத்துக்குடி, ஈரோடு, மங்களூர் ஆஸ்பத்திரிகளுக்கு புது கட்டிட வசதியும் ஒவ்வொரு ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியிலும் எக்ஸ்ரே வசதியும், க்ஷயம், குஷ்டம் மற்றும் நோய்களுக்கு தனிப்பட்ட விசேஷ சிகிச்சை வசதி களும் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. திருச்சிராப்பள்ளியில் ஆஸ்பத் திரிக்கட்டிடம் அநேகமாய் முடிந்து விட்டது. முன்னால் 145 படுக்கை வசதிகளிருந்த அந்த ஆஸ்பத்திரியில் புதுக் கட்டிடத்தில் 275 படுக்கை வசதிகள் ஏற்பட்டுள்ளன. திட்டம் முற்றிலும் பூர்த்தியாகும் போது அங்கு 350 படுக்கை வசதி ஏற்படும். கோழிக்கோடு ஆஸ் பத்திரியில் படுக்கை வசதி 450 ஆகவும் மங்களூர் ஆஸ்பத்திரியில் 116-லிருந்து 350 ஆகவும் அதிகரிக்கும்.

### சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி.

ஐந்தாண்டு திட்டத்தை, இந்த முதல் தரமான ஆஸ்பத்திரியி லிருந்த நெருக்கடியைத் தீர்க்க வந்த ஒரு வரப்பிரசாதமென்றே சொல்லலாம். ஆஸ்பத்திரியின் மூன்றும் மெத்தையில் குடியிருந்த நர்ஸுகளுக்கு எதிர்த்தாற்போலுள்ள நிலத்தில் தனி விடுதி கட்டி அவர்களை அங்கு குடியேற்றிய பிறகு ஆஸ்பத்திரியில் அதிக படுக்கை வசதி ஏற்பட்டது. திட்டத்துக்கு முன்னால் ஜெனரல் ஆஸ்பத்திரி படுக்கை வசதி 887. இப்பொழுது 1,135—திட்டம் பூர்த்தியானதும் 1,147 ஆக அதிகரிக்கும்.

ராஜ்யவைத்திய நிவாரண திட்டத்தின் கீழ் பல லோகல் பண்ட் வைத்திய ஸ்தாபனங்கள் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன.

**இதர திட்டங்கள்.**

1. க்ஷயரோக சுகவாசஸ்தலம், சிகிச்சை நிலையம்; 2. குஷ்டரோக தடை நடவடிக்கை; 3. கண் இலாகாவும் கண்ணோய் நிவாரண நடவடிக்கைகளும்; 4. கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் (குளிர்ந்த அறை); 5. மதுரையில் தொத்து நோய் ஆஸ்பத்திரி; 6. ராஜ்யத்திலுள்ள வைத்திய நூல் வாசகசாலைகளின் அபிவிருத்தி; 7. ராஜ்ய ஆராய்ச்சி கமிட்டிக்கு மான்யம்.

இவற்றில் அநேகம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.



சேரி மக்கள் சுகப்பட, சுத்தம் வேண்டுமென்று பிரசாரம் செய்கின்றனர்.



4






## கல்வி

கல்வி அபிவிருத்தியின் கீழ், பிரதமக் கல்வி, ஆதாரக் கல்வி, முதியோர் கல்வி, கண்ணில்லாதார், செவிட்டு ஊமைகளுக்குக் கல்வி ஆசிரியர் பயிற்சி இவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. சர்வ கலாசாலை படிப்பிலும் அபிவிருத்தி செய்யப்படுகிறது.



ஆதாரக் கல்வி—செய்து கற்றல்

கல்வியின் பல்வேறு துறைகளுக்கு திட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட நிதி அளவு.

| | | | லட்சம் ரூபாய். |
|---|---|---|---|
| 1 | பிரதான கல்வி, ஆதாரக் கல்வி | .. .. | 302·40 |
| 2 | சர்வ கலாசாலைக் கல்வி | .. .. .. | 55·54 |
| 3 | விசேஷ பள்ளிகள்—ஆசிரியர் பயிற்சி | .. .. | 62·07 |
| 4 | இதர திட்டங்கள்—அங்க ஹீனர் பள்ளிகள் | .. | 45·99 |
| 5 | முதியோர் கல்வி | .. .. .. .. | 27·86 |
| | | மொத்தம் .. | 493·86 |

திட்டத்தின் 3 வருஷ காலத்தில் செலவு விவரம் :

| | லட்சக் கணக்கில் செலவு. | | |
|---|---|---|---|
| | 1951–52. | 1952–53. | 1953–54. |
| 1 பிரதான கல்வி ஆதாரக் கல்வி. | 28·89 | 40·50 | 29·05 |
| 2 சர்வகலாசாலை கல்வி. | 7·30 | 5·79 | 5·01 |
| 3 விசேஷ பள்ளிகள் ஆசிரியர் பயிற்சி. | 3·61 | 3·67 | 14·80 |
| 4 இதர திட்டங்கள் அங்கஹீனர் பள்ளிகள். | 0·99 | 1·56 | 1·84 |
| 5 முதியோர் கல்வி. | 2·50 | 4·94 | 5·27 |

**பிரதமக் கல்வி, ஆதாரக் கல்வி.**

ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமானபொழுது ஆதார முறையில்லாத பிரதம பள்ளிகள் 4,667 இருந்தன. அப்பொழுது 268 ஆதாரக் கல்விப் பள்ளிகளும் இருந்தன. இந்தப் பள்ளிக்கூடங்களை தவிர பல புதுப் பள்ளிகளைத் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எலிமெண்டரிக் கல்வி விஸ்தரிப்புத் திட்டத்தின்படி பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில், திறக்க உத்தேசிக்கப்பட்ட ஆதாரக் கல்வி சேராத பிரதம பள்ளிகள். | 2,762 |
| ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திறக்க உத்தேசிக்கப்பட்ட புது ஆதாரக் கல்விப் பள்ளிகள் .. .. | 629 |
| 1953–54-ம் வருஷம் முடிவு வரை திறக்கப்பட்ட புது ஆதாரக் கல்விப் பள்ளிகள் .. .. .. .. | 575 |

**சர்வகலாசாலைக் கல்வி.**

இத்தலைப்பின் கீழ்வரும் திட்டங்கள் :—

1. சென்னை ஆர்ட்ஸ் கல்லூரியில் பி.எஸ்ஸி. வகுப்பு ஆரம்பிப்பது.

2. கோயம்புத்தூர் காலேஜை முதல் கிரேட் கல்லூரியாக உயர்த்தல்.

3. கோயம்புத்தூர் சர்க்கார் தொழில் நுட்ப கல்லூரியைப் பராமரித்தல்.

இந்தத் திட்டங்கள் ஏற்கனவே யுத்தபிற்கால அபிவிருத்தித் திட்டங்களாய் நிறைவேற்றப்பட்டு வந்தன. இப்பொழுது இவற்றைப் பராமரிக்கும் செலவு ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

**விசேஷக் கல்வி—ஆசிரியர் பயிற்சி.**

ஏற்கனவேயுள்ள ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை நடத்துவதும் மேலும் பல புதுப் பள்ளிகளைத் திறப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கம்.

| | |
|---|---|
| பராமரிக்கவேண்டிய அதிகமான வகுப்புகள் .. .. | 16 |
| பராமரிக்கவேண்டிய ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகள். | 34 |
| ஐந்தாண்டுதிட்ட காலத்தில் திறக்க விருக்கும் புது ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் .. .. | 18 |



NEMARA PUBLIC

விளையாட்டு தேகவலுவூட்டும்.

முன்னேற்ற விவரம் :—

ஆதாரக் கல்விப்பயிற்சிப் பள்ளிகள்—

| | | |
|---|---|---|
| 1951-52-ல் | திறக்கப்பட்டவை .. .. .. .. | 4 |
| 1952-53 | ஷை .. .. .. .. | 3 |
| 1953-54 | ஷை .. .. .. .. | 1 |

**இதர திட்டங்கள்—அங்கஹீனர்களுக்கு விசேஷப் பள்ளிகள்.**

சென்னை, திருநெல்வேலி, ராமநாதபுரம், கோயம்புத்தூர், தஞ்சாவூர் முதலிய இடங்களில் அங்கஹீனர்களின் கல்விக்காகப் புதிதாய் ஏற்பட்ட ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்ட மானியம் வருமாறு :—

| | ரூ. |
|---|---|
| 1951-52-ல் .. .. .. .. .. | 62,772 |
| 1952-53-ல் .. .. .. .. .. | 58,854 |
| 1953-54-ல் .. .. .. .. .. | 68,469 |

மேலே கூறப்பட்ட இடங்களில் 9 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றுடன் கண்ணில்லாதவர்களுக்கு பூந்தமல்லி, சேலம், காஸர்கோடு, இவ்விடங்கள் 3 பள்ளிகளும், மலையாளத்தில் சுனங்காட்டில் ஊமைகளுக்கு ஒரு பள்ளியும் சர்க்கார் நடத்துகின்றனர்.

**முதியோர் கல்வி.**

1948-ல் ஒரு ஒழுங்கான முறையில் முதியோர் கல்வி அபிவிருத்தியைச் செய்யத் திட்டம் வகுக்கப்பட்டது. 1954 அக்டோபரில் அத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி முதியோர் கல்வி அபிவிருத்தியை சமுதாய நலத் திட்டம், தேசியவளர்ச்சித் திட்டம் இவற்றின்கீழ் நடத்த நிச்சயிக்கப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வகைக்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 27·86 லட்சம். முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 12·71 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 7·17 லட்சம் இந்த வருஷம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பாக்கியுள்ள ரூ. 7·98 லட்சம் திட்டத்தின் இறுதி ஆண்டான 1955-56-ல் செலவு செய்யப்படும்.






## அரசாங்க சாலைகள்

இந்தியாவிலேயே, அதிகப்படியான கப்பி ரஸ்தாக்களை அமைந்திருப்பதற்காக சென்னை ராஜ்யம் பெருமித மடையும் நிலையிலுள்ளது. நாட்டின் மொத்தப் பரப்புக்கும் ரஸ்தாவுக்குமுள்ள சராசரி அளவு நல்ல ரஸ்தாக்களைப் போல் சென்னை ராஜ்யத்தில் இரு மடங்கு ரஸ்தாக்கள் இருக்கின்றன.

தற்போது சென்னை ராஜ்யத்திலுள்ள ரஸ்தாக்கள் :

1. தேசீய சாலைகள் 1,065 மைல் ; 2. ராஜ்ய சாலைகள் 1,653 மைல் ; 3. ஜில்லா மேஜர் ரஸ்தாக்கள் 9,000 மைல் ; 4. இதர ஜில்லா ரஸ்தாக்கள் 5,257 மைல் ; 5. கிராம ரஸ்தாக்கள் 8,674 மைல். 6. மராமத்து இலாகா சாலைகள் 633 மைல் ; 7. முனிசிபல் ரஸ்தாக்கள் 2,271 மைல். மொத்தம் ரஸ்தா நீளம் 28,553 மைல்.



கூலூர் பாலம்.

**சென்னை ராஜ்யத்திலுள்ள பல ரக ரஸ்தாக்கள்.**—1953 மார்ச் 31-ந் தேதியில் :—

1. சிமிண்ட் காங்கிரீட் 327 மைல் ; 2. கருப்பு தளம் 2,442 மைல் ; 3. கப்பிரஸ்தா 14,981 மைல் ; 4 மண் ரஸ்தா 10,803 மைல்.

தேசீய சாலைகளை ராஜ்ய சர்க்காரே பராமரிக்கின்றனர். ஆனால் பராமரிப்பு, அபிவிருத்திச் செலவுகள் இந்திய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்படும். அதன்படி 1954–55-க்கு இந்திய சர்க்காரால், ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 36·95 லட்சம். 20,000-க்கு மேல் ஜனத் தொகையுள்ள நகரங்களிலுள்ள ரஸ்தாக்களில் தேசீய சாலைகளுடன் இணைக்கப்பட்டவற்றை ராஜ்ய நிதியிலிருந்தே பராமரிக்கின்றார்கள்.

1946-ல் அமைக்கப்பட்ட சாலை இலாகா, சர்க்கார், ஜில்லா போர்டுகளில் புது ரஸ்தா போடும் வேலையையும், ரஸ்தாக்களின் பராமரிப்பு வேலை களையும் கவனித்துக்கொள்கிறது.

எல்லா ராஜ்யங்களுக்கும் சேர்ந்ததாக சாலை அபிவிருத்தி திட்டம் ஒன்றை 1943-ம் வருஷத்திய நாகபுரித் திட்டம் வகுத்தது. அந்த அறிக்கையை ஒட்டி சென்னை ராஜ்யத்துக்கு விரிவான யுத்த பிற்காலத் திட்டம் ஒன்று 25 வருஷ கால வரையறையில் வகுக்கப்பட்டுள்ளது. இந்த வேலை 1946-ல் ஆரம்பமாயிற்று.

25 ஆண்டு திட்டம் ராஜ்யத்தின் மொத்த ரஸ்தா நீளத்தை 31,154 மைல் ஆக அதிகரிக்கச் செய்யும். ஜனத் தொகை 500 உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் இணைப்பு ரஸ்தாக்களை அமைக்கும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது அம்சமாக நிறை வேற்றப்பட்டது. :—

1. சிமிண்டு காங்கிரீட்டு தளம்—75 மைல்.
2. கருப்புத் தளம்—66 மைல்.
3. கப்பித் தளம்—1,003 மைல்.
4. புதிதாய்ப் போடப்பட்டது—1,043 மைல்.
5. பெரிதும் சிறிதுமான பாலங்கள் செலவு ரூ. 49 லட்சம்.

முதலாவது ஐந்தாண்டுகளுக்கு, திட்டக் கமிஷன், சென்னை ராஜ்ய ரஸ்தா அபிவிருத்திக்கு ரூ. 3·58 கோடி ஒதுக்கியிருக்கிறது. இது வரை ரூ. 105 லட்சங்களுக்குப் பாலங்களும் ரூ. 14·5 லட்சம் செலவில் சிமிண்ட் காங்கிரீட் ரஸ்தா 26 மைலும், ரூ. 11·3 லட்சத்தில் கருப்புத் தள ரஸ்தா 56 மைலும், ரூ. 67·5 லட்சத்தில் 1,370 மைல் புது ரஸ்தாக்களும். ரூ. 13·7 லட்சத்தில் கப்பி ரஸ்தாக்கள் 246 மைலும் போட்டிருக்கிறார்கள். ரஸ்தாக்களில் போக்கு வரத்துக்கு வசதியாகப் பல பாலங்களும், தோணிப் பாலங்களும் கட்டியிருக்கிறார்கள்.

நடந்து கொண்டிருக்கும் பால வேலைகள் வருமாறு :—

1. செங்கற்பட்டிற்கருகில் பாலாறு நதியில் பாலம்—ரூ. 25 லட்சம்.

2. திருக்கழுக்குன்றம் ரஸ்தாவில் பாலம்—4·25 லட்சம்.

3. ஆனைக்காரன் சத்திரத்துக் கருகில் கொள்ளிடத்தில் பாலம் 28·5 லட்சம்.

4. சேர்வத்தூர் ரஸ்தாவில் பாலம்—6·34 லட்சம்.

5. மேலபட்டம்பாத்துக் கருகில் பெண்ணாற்றில் தோணிப் பாலம்—5·44 லட்சம்.

6. தூத்துக்குடி–திருச்செந்தூர் ரஸ்தாவில் தாம்பரபரணியில் பாலம்—7·7 லட்சம்.

7. திருநெல்வேலி ஜில்லாவில் மணப்பாடு பாலம்—3·56 லட்சம்.

கொள்ளிடம், பாலாறு பாலங்கள் நவீனமுறையில் பல மூட்டப் பட்ட காங்கிரீட் பாளங்களால் கட்டப்படுவது. இந்த முறையில் கட்டப்படும் பாலங்களில் கொள்ளிடம் பாலாறு பாலங்கள் இந்தியாவிலேயே முதலாவதாகவும், கொள்ளிடம் பாலம் உலகத்திலேயே நீளமானதாகவும் ஆகும்.






## ஹரிஜன க்ஷேம நலன்

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஹரிஜன க்ஷேம நலனுக்காகச் செய்யப்படும் வேலைகள் நிர்வாகம், கல்வி, சுகாதாரம், இதர திட்டங்கள்—பின் தங்கிய வகுப்பினர்களுக்கு கல்விச் சலுகைகள், என்ற தலைப்புகளில் வரும். 1951-52-ம் ஆண்டிலிருந்து இத் திட்டங்கள் நிறை வேற்றப்படுகின்றன.

**நிர்வாகம்**

இந்த இலாகாவின் அலுவல் முழுவதும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹரிஜன க்ஷேம நல இலாகா டைரக்டர், இலாகா தலைமை அதிகாரி. ஜில்லாக்களில் அவருக்கு உதவியாக ஜில்லா க்ஷேமநல அதிகாரிகள் இருக்கிறார்கள். 1951-52 முதல் 1954-55 (முதல் அரை வருஷம்) முடிய இந்த இலாகா சிப்பந்தி செலவு ரூ. 18·14 லட்சம்.

**கல்வி**

1951-52 முதல் 1954-55 (முதல் அரை வருஷம்) வரை உபகாரச் சம்பளம், ஹாஸ்டல் நிர்வாகம், பிரத்தியேக பள்ளிகள் நிர்வாகம் இவற்றிற்கு ரூ. 180·04 லட்சம் செலவாகியிருக்கிறது.

| வருஷம். | | உபகாரச் சம்பளம். எண்ணம். | |
|---|---|---|---|
| 1951-52 | .. | 19,717 | ஆந்திரா சேர்ந்த சென்னை ராஜ்யம். |
| 1952-53 | .. | 17,116 | |
| 1953-54 | .. | 1,583 | ஹாஸ்டலில் இல்லாத மாணவர்களுக்கு மட்டும் கொடுத்த உபகாரச் சம்பள எண் |
| 1954-55 | .. | 1,309 | |

ணம். எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு கலெக்டர்களால் கொடுக்கப்பட்டவை. சரியான விவரம் கிடைக்காததால் அநேகம் இதில் சேரவில்லை. எனவே எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்படுகிறது.

அதிகார சார்ப்பற்ற ஹாஸ்டல்களில் வசிக்கும் ஹரிஜனங்களுக்குத் தலா ரூ. 15 சர்க்கார் உதவிப்பணம் கொடுக்கிறார்கள் :—

| வருஷம். | | போர்டிங் மானியு எண்ணம். | |
|---|---|---|---|
| 1951-52 | .. | 13,314 | ஆந்திரா சேர்ந்த சென்னை ராஜ்யம். |
| 1952-53 | .. | 14,132 | |
| 1953-54 | .. | 5,844 | |
| 1954-55 | .. | 5,625 | |

இவை தவிர சர்க்கார் நிர்வாக ஹாஸ்டல்களும் உள்ளன :—

| வருஷம். | | ஹாஸ்டல்கள். | மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆண். | பெண். |
| 1951-52 | .. | 14 | 587 | 170 |
| 1952-53 | .. | 17 | 775 | 170 |
| 1953-54 | .. | 20 | 1,065 | 175 |

1951-52 முதல் நடைபெறும் சர்க்கார், ஹரிஜன க்ஷேம நலப் பள்ளிகளும்—மாணவர்களும் :—

| வருஷம். | | | பள்ளிகள். | மாணவர்கள். |
|---|---|---|---|---|
| 1951-52 | .. | .. | 894 | 71,028 |
| 1952-53 | .. | .. | 900 | 72,138 |
| 1953-54 | .. | .. | 906 | 79,014 |

இவற்றில் மொத்தம் 2,125 ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

**சுகாதாரம்**

வீட்டு மனைகள், கிணறுகள், பாதைகள், சுகாதர வசதிகள் இவற்றிற்கான செலவு விவரம் :—

| வருஷம். | | | | | தொகை லட்ச ரூபாய். |
|---|---|---|---|---|---|
| 1951-52 | .. | .. | .. | .. | 6·79 |
| 1952-53 | .. | .. | .. | .. | 8·09 |
| 1953-54 | .. | .. | .. | .. | 4·30 |
| 1954-55 (முதல் அரை வருஷம்) | | | .. | .. | 1·37 |

விலைக்கு வாங்கிக் கொடுத்த மனைகளும், மராமத்து செய்த கிணறுகளும் :—

| வருஷம். | | மனைகள் விஸ்தீர்ணம் எக்கர். | கொடுத்த மனைகள். | மராமத்து செய்த கிணறுகள். |
|---|---|---|---|---|
| 1951-52 | .. | 473·92 | 7,149 | 77 |
| 1952-53 | .. | 158·95 | 4,545 | 123 |
| 1953-54 | .. | 219·96 | 3,286 | 96 |

## பின்தங்கியவர் கல்விச் சலுகை—கள்ளர் சீர்திருத்தம்

1951-52 முதல் 1954-55 முதல் அரை வருஷம் வரை பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்ட உபகாரச் சம்பளம், ஹாஸ்டல் மானியங்களுக்கும், கள்ளர், குறவர் சீர்திருத்தத்துக்கும் ரூ. 43·99 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மதுரை, ராமநாதபுரம், செங்கற்பட்டு, சேலம் ஜில்லாக்களில் கள்ளர், குறவர்களுக்கு உபகாரச் சம்பளம், ஹாஸ்டல் மானியம், பிரத்தியேக பள்ளிகள் எல்லா வசதிகளும் கொடுக்கப்படுகின்றன.

| வருஷம். | | உபகாரச் சம்பளங்கள். | ஹாஸ்டல் மானியங்கள். | |
|---|---|---|---|---|
| 1951-52 | .. | 3,325 | 1,249 | ஆந்திரா சேர்ந்த சென்னை ராஜ்யம். |
| 1952-53 | .. | 3,981 | 1,311 | |
| 1953-54 | .. | 3,588 | 749 | ஆந்திரா நீங்கிய சென்னை ராஜ்யம். |
| 1954-55 | .. | 4,252 | 838 | |

### கள்ளர், குறவர் சீர்திருத்தம்

| வருஷம். | | | பள்ளிகள். | மாணவர். | மாணவிகள். | ஹாஸ்டல் மானியம் ஆண். | ஹாஸ்டல் மானியம் பெண். | ஆசிரியர். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1951-52 | .. | .. | 247 | 7,791 | 3,546 | 485 | 528 | 567 |
| 1952-53 | .. | .. | 242 | 7,435 | 3,426 | 528 | 517 | 557 |
| 1953-54 | .. | .. | 243 | 8,000 | 3,468 | 445 | 566 | 546 |






# கிராமாபிவிருத்தி

கிராமாபிவிருத்தித் திட்டம் இந்த ராஜ்யத்தில் 1946-ல் ஆரம்பமாயிற்று. கிராம வாழ்க்கைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் இது துவக்கப்பட்டது. முதலாவது 34 பிர்க்காக்களில் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டது.



ஊர் மக்களே ரஸ்தா அமைக்கிறார்கள்.

அதன்படி, கிராம போக்குவரத்து வசதிகள், கிராமக் குடிதண்ணீர் விநியோகம், பஞ்சாயத்து சபைகள் அமைப்பு, கூட்டுறவு இயக்கம், சுகாதார வேலைகள் எல்லாம் குறுகிய காலத் திட்டங்களாகவும், விவசாய, நீர்ப்பாசன சுயதேவை பூர்த்தி, கால்நடைகள், போக்குவரத்துக்கள், கதர், குடிசைக் கைத்தொழில்கள் அபிவிருத்தி முதலியன நீண்ட காலத் திட்டங்களாகவும் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டம் தேசிய வளர்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டது.



மதுரை திட்டப் பிரதேசத்தில் கிராம மக்கள் குளத்தில் பாசி அகற்றுகிருர்கள்.

## சமுதாய நலத்திட்டங்களும், தேசிய வளர்ச்சித் திட்டங்களும்

சமுதாய நலத்திட்டங்களும், தேசிய வளர்ச்சித் திட்டங்களும், ஸ்தல அபிவிருத்தி வேலைகளும் மத்திய சர்க்கார் உதவியுடன் நடப்பவை. சென்னை ராஜ்யத்தில் தற்போது 4 மேஜர் சமுதாய நலத் திட்டங்களும், 4 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும், 48 தேசிய வளர்ச்சித் திட்டவட்டாரங்களும் நடைபெறுகின்றன. சமுதாய நலத் திட்டங்கள் 25 லட்சம் மக்களுக்கும், தேசிய வளர்ச்சித்திட்டம் 51 லட்சம் மக்களுக்கும் பயனளிக்கின்றன. கிராம ஜனத்தொகை 279 லட்சத்தில் மொத்தம் 76 லட்சம்பேர் பயன்பெறுகிருர்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் அதாவது 1956 மார்ச் 31-ல் கிராம ஜனத் தொகையில் $\frac{1}{4}$ பங்கு பயன் பெறச் செய்யவேண்டுமென்பது திட்டத்தின் லட்சியம். அந்த லட்சியம் நம் ராஜ்யத்தில் இப்பொழுதே நிறைவேறிவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் கிராம ஜனங்கள் பூராவும் பயனுறும் வகையில் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

தேசிய வளர்ச்சித் திட்டம் 1954-ம் ஆண்டு அக்டோபரில் அமலுக்கு வந்தது. 1954-ம் ஆண்டு செப்டம்பர் 30-ந் தேதிவரை ஏற்பட்டிருந்த அபிவிருத்திகள் கீழே தரப்படுகின்றன :—

| தலைப்பு. | சமுதாய நலத் திட்டம். | சமுதாய நல அபி விருத்தி வட்டாரம். | தேசிய வளர்ச்சி திட்டவட் டாரங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 ஜனத் தொகை .. | 2,175,551 | 368,356 | 3,479,993 | 6,023,900 |
| 2 மக்கள் பங்கு (ஆயிரம் ரூ.) | 986·7 | 109·5 | 1,273·8 | 2,370·0 |
| விவசாயம். | | | | |
| 3 வித்து விநியோகம் (மணங்கு). | 14,358 | 3,386 | 12,516 | 30,260 |
| 4 உர விநியோகம் (மணங்கு). | 678,731 | 23,860 | 160,748 | 863,339 |
| 5 செய்து காட்டிய காட்சி கள். | 2,574 | 310 | 1,212 | 4,096 |
| 6 காய் கனி, பழம் சாகுபடி (ஏக்கர்). | 3,363 | 144 | 3,165 | 6,672 |
| கால்நடை அபிவிருத்தி. | | | | |
| 7 பொலி காளை விநியோகம். | 27 | 4 | 187 | 218 |
| 8 உயர்தர பறவைகள் விநி யோகம் | 101 | 33 | 2,163 | 2,297 |
| நீர்ப்பாசனம். | | | | |
| 9 பாசனம் பெற்ற விஸ்தீர் ணம் (ஏக்கர்). | 20,345 | 3 | 1,205 | 21,553 |
| 10 குடி தண்ணீர் கிணறுகள் புதிது. | 141 | 11 | 238 | 390 |
| 11 கிணறு மராமத்து .. | 467 | 10 | 185 | 662 |
| கல்வி. | | | | |
| 12 புதுப்பள்ளிகள் .. | 69 | 6 | 253 | 328 |
| 13 சமூகக் கல்வி முறைக்கு மாற்றப்பட்டவை. | 31 | .. | 21 | 52 |
| 14 பொது ஜன விளையாடு மிடங்கள். | 125 | 10 | 301 | 436 |
| போக்குவரத்து. | | | | |
| 15 கப்பி ரஸ்தா (மைல்) .. | 11 | 3 | 142 | 156 |
| 16 மண் ரஸ்தா (மைல்) .. | 522 | 56 | 23 | 817 |

# உழைப்பு சகாப்தம்

அடுத்த வருஷத்திற்குள் தேசியத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தியாக சிரத்தையுடன் முயற்சிக்கவேண்டுமென்று இந்திய சர்க்காரும், திட்டக்கமிஷனும் கருதுகிறார்கள். நம் ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை அடுத்த வருஷத்துக்கு ரூ. 20 கோடி தேவையாகும். இதற்குப் போதுமான நிதி உதவியை இந்திய சர்க்கார் அளிப்பார்களென்று நம்பப்படுகிறது.

மனிதனே தன் விதியை உருவாக்குகிறான். இது தனிப்பட்டவர்களுக்குமட்டுமல்ல; சமுதாயத்துக்கும் பொருத்தமாகும். சோம்பல் ஏற்பட்டால் அழிவு ஆரம்பிக்கிறது. இதற்கு சரித்திர உதாரணம் பல உள. அதே தவறை நவ இந்தியா செய்யமுடியாது. தவிர இது உழைப்பு சகாப்தம். நவ இந்திய நிர்மாணத்துக்கு நாம் அஸ்திவாரம் போடுகிறோம். அஸ்திவாரம் சரியானபடி நல்லதாகவும் உண்மை உணர்வுடனும் அமைக்கப்பட்டால் அதன்மேல் உருவாகும் கட்டிடம் புயலுக்கோ, பூமி அதிர்ச்சிக்கோ அசையாது நிற்கும்.